கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(01.09.2019 - 01 புரட்டாதி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 10, கதிர் - 215, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி


ஞான ஔி GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

# யார் எம்மை ஏமாற்றினாலும் இறைவன் எம்மை ஏமாற்ற மாட்டார்

## நோயாளர் தினத்தில் பேராயர்






பாஸ்கு ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி-நியாயம் கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை அதற்காக எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ள தயார்! நடந்த அசம்பாவிதம் குறித்து நான் பல தடவைகள் நீதியைப் பெற்றுத் தருமாறு கூறினேன். ஆயினும் எமக்கு கிடைத்த பதில் என்ன என்பதை எமது மக்கள் அறிவார்கள். ஏன் எங்களுக்கு இப்படி செய்தீர்கள்? யாருடைய தேவைகளுக்காக இவ்வாறு நடக்க இடமளித்தனர்? போன்ற கேள்விகளுக்கு இன்றுவரை விடை கிடைக்கவில்லை. எமது நாட்டில் அண்மைக்காலங்களில் நடைபெற்றுவரும் நிகழ்வுகளைப் பார்க்கும்போது....

தொடர்ச்சி 15ம் பக்கம்..




## “ஞான ஒளி” பிரகாசிக்க வாழ்த்துகின்றேன்

**அருட்பணி. கலாநிதி. கமிலஸ் பர்னாந்து, ஆசிரியர் மெசஞ்சர், ஞானார்த்த பிரதீபய இயக்குனர் கொழும்பு கத்தோலிக்க அச்சகம்.**



கொழும்பு உயர்மறைமாவட்ட கத்தோலிக்க அச்சகத்தினால் வெளியிடப்படும் தமிழ் கத்தோலிக்கப் பத்திரிகையான ஞான ஒளியின் 10வது ஆண்டில் கால்பதிக்கும் இவ்வேளையில் எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.
இறைவனின் செய்தியை தமிழ் மக்களுக்கு வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் ஞான ஒளியின் பணியாளர்கள் ஒவ்வொருவரையும், அவர்களின் கடின உழைப்பையும் எண்ணிப் பாராட்டுகின்றேன்.
அந்த வகையில் இப்பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அருட்பணி. மனோகுமரன் நாகரட்ணம் அடிகளாரின் தலைமைத்துவமும், தொடக்கம் முதல் இன்றுவரை காட்டிவரும் ஆர்வமும் இப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு காரணம் எனலாம்.
எதிர்காலத்திலும் ஞான ஒளி பத்திரிகையானது இதைவிட வேகமாக தமிழ் மக்களுக்கு உணர்வுபூர்வமாக செய்திகளை வழங்கி மக்களை ஆன்மீகத்தில் வளர்த்தெடுக்க இறையாசீர் கிடைப்பதாக.

## 10வது அகவைக்குள் ஞான ஒளி

**அருட்பணி. மனோகுமரன் நாகரெட்ணம், ஞானஒளி ஆசிரியர்**

ஞான ஒளி பத்திரிகையானது இம்மாதம் 5ம் திகதி தனது 10வது அகவைக்குள் கால் பதிக்கிறது. இதையிட்டு மகிழ்ச்சியோடு இறைவனுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
அத்தோடு கடந்த ஒன்பது வருடங்களாக இப்பத்திரிகை வளர்ச்சிக்கு உதவி நல்கி இதை தொடர்ந்து எடுத்துச்செல்வதற்கு கத்தோலிக்க அச்சகத்தின் முன்னாள் இயக்குனர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தற்போது இயக்குனராக பராமரித்து வரும் அருட்பணி. கலாநிதி. கமிலஸ் பர்னாந்து அடிகளாருக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதோடு பல வழிகளிலும் எமக்கு ஆக்கங்களையும், செய்திகளையும் தந்துதவிய எல்லா நல் உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கு கொள்கின்றேன். தொடர்ந்து இப்பத்திரிகையை மேலும் வளர்க்க ஊக்கமெடுங்கள். வழிநடத்திய இறைவனுக்கும் வாசகர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



## “தாய் நாட்டை தேவதாய்க்கு அர்ப்பணித்தல்” புரட்டாதி 8ம் திகதி ஞாயிறு



**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் வேண்டுகோள்**

பாஸ்கு ஞாயிறு தற்கொலை தாக்குதலின்பின்பு நாட்டிலும் மக்களிடையேயும் ஏற்பட்டுள்ள அச்சத்தைப் போக்க இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை, எமது தாய் நாட்டை மோட்ச ராக்கினியின் பாதுகாப்பில் ஒப்படைக்கவும், நாட்டு மக்களை பாதுகாக்கவும் நாட்டுத் தலைவர்களின் இக்கட்டான நிலையில் சரியான வழியைக் காட்ட சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க தீர்மானித்ததன் படி....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## அன்னைக்கு முடி சூட்டும் நிகழ்வு



தேவ அன்னையே! எமது நாட்டை காப்பாற்றுங்கள்!! நல்லதொரு நாடாக மாற்றுங்கள்!!! இரண்டாம் உலக யுத்தத்தின்போது எமது நாட்டை பாதுகாத்த தேவ அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட பசிலிக்கா திருத்தலத்தில் மீண்டும் எமது நாட்டை உம்மிடம் ஒப்படைக்கிறோம்! தேவ மாதாவே! எமது நாட்டைக் காப்பாற்றி நல்லதோர் நாடாக மாற்றியருளும்!! என விசேட வேண்டுதல்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

**ஒடுக்கப்பட்டோர்க்கு கடவுளே மறுவாழ்வு அளித்தீர். (தி.பா 68)**

# இம்மாத திருவிழாக்கள்

## ஆயித்தமலை, மட்டக்களப்பு சதாசகாய அன்னைத் திருத்தல வருடாந்த திருவிழா – 2019

**கொடியேற்றம்** 2019.08.30 மாலை 5.00 மணிக்கு
**பாதயாத்திரை** 2019.09.7 மாலை 5.00 மணிக்கு
**மாலை ஆராதனை** 2019.09.07 மாலை 6.30 மணிக்கு
முதலாவது திருப்பலி (சிங்களத்தில்) 2019.09.08 மாலை 5.15 மணிக்கு
**திருவிழா திருப்பலி** 2019.09.08 காலை 7.15 மணிக்கு மட்டக்களப்பு ஆயர் மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில்.

**தகவல் : பங்குத்தந்தை**

## செக்கடித்தெரு புனித அன்னம்மாள் பங்கின் வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா திருவிழா – 2019

ஆவணி மாதம் 30ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.00 மணி திருப்பலிக்குப் பின் கொடியேற்றம். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணிக்கு விசேட கருத்துக்களுக்கான திருப்பலியும், மாலை 6.15 மணிக்கு நவநாள் திருப்பலியும் நடைபெறும்.

**8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழாத் திருப்பலி**

காலை 6.00 தமிழ், காலை 7.30 சிறப்பு திருவிழா திருப்பலி தமிழ், காலை 9.30 ஆங்கிலம், காலை 10.30 சிங்களம், நன்பகல் 12.00 மணி தமிழ், மாலை 4.00 தமிழ், இத்திருப்பலியைத் தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு ஆலயத்தினுள் நற்கருணை ஆசீர்வாதமும் அன்னையின் திருச்சுரூப ஆசீர்வாதமும் நடைபெறும்

**தகவல் : பங்குத்தந்தை**

## தல்கஸ்வலை புனித கல்கத்தா தெரெசா ஆலயத் திருவிழா - 2019

தல்கஸ்வலை புனித அன்னை தெரெசா ஆலயம் திருவிழா இவ்வருடம் 2019.09.08 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 2019.09.15 அன்று காலி மறைமாவட்ட ஆயர் மேதகு. றோமன்ட் விக்கரமசிங்க ஆண்டகையின் தலைமையில் நடைபெறும். இத்திருவிழாவிற்கு அனைவரும் வருகை தந்து புனித கல்கத்தா தெரெசாவின் வழியாக இறைவனின் அற்புதங்களையும் ஆசீரையும் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

2019.09.15 காலை 9.30 மணி திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சுரூபப் பவனி நடைபெறும்.

**திருப்பயணிகளின் தொடர்புக்கு**
அருட்பணி. அருண் றெக்ஸ் 075 0473011
அருட்பணி. ஆரோக்கியசாமி 075 5063199

**தேவாலத்திற்கு வரும் வழி**
கொழும்பிலிருந்து 70வது கிலோமீற்றர் எல்பிட்டிய இருக்கிறது. அங்கிருந்து 18 கிலோமீற்றர் தொலைவில் ஆலயம் அமைந்துள்ளது.

**கொழும்பிலிருந்து பேருந்தில் வருவதற்கு**
Jesfer 0773455096
Retta 0770546966
Maria Bakery 0777895869
Amalachandiran 0770790709

**தகவல் : கார்மெல் அருட்பணியாளர்கள், பங்கு மக்கள்**

# முக்கிய அறிவித்தல்

இந்த வருடம் நடைபெற இருந்த தேசிய குடும்ப கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணங்களால் அடுத்த வருடத்திற்குப் பின் போடப்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்து கொள்கின்றோம்.

இக்கருத்தரங்கானது அடுத்த வருடம் புரட்டாதி (செப்டெம்பர்) 18 முதல் 20 வரை தலவில புனித அன்னாள் திருத்தலத்தில் இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றேம்.

**தகவல் : அருட்தந்தை க்ளோட நோனிஸ், இயக்குனர், தேரிய குடும்ப பணியகம்.**

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com

# “கிறிஸ்துவின் உயிர்ப்பை சந்தோசத்துடன் அனுபவிப்பதற்கு பதில் மிகப்பெரிய துக்கத்தை அனுபவிக்க நேர்ந்ததை முன்னிட்டு நான் கவலையடைகிறேன்!”



**கடந்த வாரம் நீர்கொழும்பு போலவலான 16வது ஆசீஉவாதப்பர் உயர் கல்வி நிலையத்தில் பிரதான பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக வருகைத் தந்த இத்தாலி ஆயர் மன்றத் தலைவர் கர்தினால் ஆண்டகை சிறப்புரையாற்றுகையில் மேற்கூறப்பட்டவாறு தெரிவித்தார்.**

கடந்த பாஸ்கு ஞாயிறில் முழு உலகமும் கவலைப்படும் அனர்த்தத்தை நீங்கள் அனுபவித்தீர்கள்! என்பதை நான் அறிவேன். நாம் கிறிஸ்துவின் உயிர்ப்பில் சந்தோசப்பட வேண்டிய நாள், ஆயினும் இயேசு பெரிய வெள்ளியன்று சிலுவையில் அறையப்பட்ட வேதனையை நீங்கள் உயிர்த்த ஞாயிறு அனுபவித்தீர்கள். என வருத்தத்துடன் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தார். தொடர்ந்து கூறுகையில், உங்கள் நாட்டில் இவ்வாறான துர்ரதிஷ்டமான நிகழ்வு மீண்டும் நிகழக் கூடாது என எனது செபத்தில் செபிக்கிறேன். இங்குள்ள இளைஞர் யுவதிகளிடம் ஒரு வேண்டு கோளையும் முன் வைக்க விரும்புகிறேன். வைராக்கியம், குரோதம், மற்றவர்களின் சீண்டுதலுக்கு ஆளாகாமல் உங்களையும் அதன் மூலம் நாட்டையும் காத்துக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்!”

16வது ஆசீர்வாதப்பர் உயர் கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி குயிண்டஸ் பர்னாந்து அவர்களும், செயலாளர் பிரியங்கர சில்வா அவர்களும் இத்தாலி அருட் பணி லியனார் டோ டீ போரோ அவர்களும் நீர்கொழும்பு வட்டார அருட் தந்தையர்களும் கலந்து கொண்டனர். கொழும்பு அக்குவயினஸ் உயர் கல்வி நிறுவனத்தின் சமநிலைக்கு உயர்த்த இந்த ஆங்கில டிப்ளோமா பட்டமளிப்பு விழாவில் 150 இளைஞர் - யுவதிகள் தமது அங்கீகாரத்தைப் இத்தாலி ஆயர் மன்ற தலைவர் கர்தினால் அவர்களிடமிருந்துப் பெற்றுக்கொண்டார்கள்.

இந்நிறுவனத்தின் உதவி அருட்பணி ருவன் நிலங்க அருட்பணி ரசிக்க பெரேரா ஆகியோரால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**தகவல் : T சுனில்**

# புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய உறுதிபூசுதல் நிகழ்வு – 2019



கடந்த மாதம் 24ம் திகதி புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய மாணவ மாணவியர்களுக்கு உறுதிபூசுதல் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அன்றைய திருப்பலியை கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. மெக்வல் சில்வா ஆண்டகையோடு இணைந்து எமது பங்குத்தந்தை அதிவண. அருட்பணி. மனோகுமரன் நாகரட்ணம் அடிகளார், மற்றும் உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. சுராஜ் அடிகளார் ஆகியோர் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். அவற்றின் சில நிகழ்வுகளைப் படத்தில் காணலாம்.

**படம் மற்றும் தகவல் J. பர்னாந்து**




அருட்தந்தை எல்மோ டயஸ் 14.08.2019 அன்று காலமானார். இவர் கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் ஆயரின் பதிலாளராக கடமையாற்றியவர். மற்றும் தேசிய குருமடத்தில் அதிபராகவும் இருந்தவர். இவர் தமது குருத்துவ வாழ்வின் 31 ஆண்டுகள் இறைபணி புரிந்திருக்கின்றார். இவரின் இறுதிச் சடங்கு பேராயரின் தலைமையில் மொறட்டுவ புனித செபஸ்தியார் ஆலயத்தில் நடைபெற்றது. இவரின் ஆன்ம இறைவனில் இளைப்பாற ஞானஒளி பிரார்த்திக்கின்றது.

# பனிமய மாதா ஆலயத்தின் 81வது வருடாந்த திருவிழா 2019



புறக்கோட்டையில் அமைந்துள்ள பனிமய மாதா ஆலயத்தின் 81வது வருடாந்த திருவிழா 18.08.2019 அன்று கொண்டாடப்பட்டது. அன்றைய நிகழ்வுகளில் சிலவற்றைப் படத்தில் காணலாம்.

**படம் மற்றும் தகவல் J. பர்னாந்து**

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
01 புரட்டாதி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# "உலகம் போற்றும் மாதரசியாக, மாதாவாக விளங்குகின்றாள் நம் தாய்.

புரட்டாதி மாதம் வந்ததும் நம் நினைவெல்லாம் அன்னை மரியாவின் பிறப்புப் பெருவிழா ஒட்டியே இருக்கும். "அன்னையின் பெயர் கொண்ட எல்லா ஆலயங்களிலும் திருவிழா விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. புரட்டாதி எட்டாம் நாள் எட்டாக்கனியாய் இருந்த மனித மீட்பை, தன் மகன் இயேசுவால் நாம் எட்டிப்பிடிக்கச் செய்த அன்னையின் பிறந்தநாள்.

நம்முடைய கத்தோலிக்க திருச்சபையிலே மூன்று நபர்களின் பிறந்த நாள்களை மட்டுமே நாம் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றோம்.

1. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மார்கழி - 25
2. கன்னி மரியாள் புரட்டாதி - 08
3. திருமுழுக்கு யோவான் ஆனி 24

மற்ற புனிதர்களின் இறந்த தினங்களைத் தான் (விண்ணகப் பிறப்பை) அவர்களின் திருவிழாவாகக் கொண்டாடுகின்றோம். இதிலிருந்து நம் அன்பு அன்னைக்கு திருச்சபை கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். அன்னை மரியாள் இயேசுவுக்கு மட்டுமல்ல தாய். மாறாக உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும், ஏன் இந்த உலகத்தில் வாழ்ந்து மடிந்தவருக்கும், மரியாள்தான் தாயாக விளங்குகின்றாள். இதை சிலுவையின் அடியில் இயேசு எங்களுக்கு தந்துச் சென்ற பாக்கியமான கொடை அன்னை மரியாள். எப்பொழுதும் இன்முகத்தோடு அவரை தேடி வருவோருக்கெல்லாம் தயை காட்டுபவள் அன்னை. கையேந்தி நிற்பவர்களுக்கு வெறும் கையாய் அனுப்பாதவள் நமது அன்னை. உலகம் போற்றும் மாதரசியாக, மாதாவாக விளங்குகின்றாள் நம் தாய். எனவே அந்த அன்னையின் அருள் பெற்று எம் வாழ்வை வளமாக்குவோம். அன்னைக்கு பிறந்தநாள் பரிசாக எம்மை அவரிடம் ஒப்படைத்து வாழ்வோம். தினமும் செபமாலை தியானத்தை தியானிப்போம்

இம்மாதத்தில் நாம் இன்னொரு பிறந்த நாளையும் கொண்டாடுகின்றோம். கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் கத்தோலிக்க அச்சகத்தின் கடைசிப் பிள்ளையாக வலம்வரும் ஞான ஒளி பத்திரிகையானது தனது 9வது வயதை கடந்து 10வது அகவைக்குள் கால்பதித்து நிற்கின்றது. இம்மாதம் 5ம் திகதி தனது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றது. அதாவது ஞான ஒளி 10வது ஆண்டுக்குள் கால்பதிக்கிறது. ஞான ஒளி பத்திரிகை இதுவரையில் சிறப்பாக வெளிவருகின்றது என்றால் அது இறைமக்களாகிய நீங்கள் தரும் ஆக்கமும் ஊக்கமும் என்றே கூற வேண்டும். வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை கூறிக்கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன். அத்தோடு இப்பத்திரிகைக்கு ஆக்கங்களை தொடர்ந்து எழுதிவரும் அருட்பணியாளர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், மற்றும் இறைமக்கள் ஆகிய அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றிகளை தெரிவிக்கின்றேன். இனிவரும் காலமும் உங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கி மேலும் ஞான ஒளி மெருகூட்டப்பட வேண்டும். இதன் விற்பனை பெருக வேண்டும். கொழும்பு உயர்மறைமாவட்டத்திலிருந்து வெளிவரும் ஒரேயொரு தமிழ் பத்திரிகை ஞான ஒளி பத்திரிகையே. எமது மறைமாவட்டம் மட்டுமல்ல ஏனைய மறைமாவட்டங்களிலும் எல்லோராலும் விரும்பி வாசிக்கக் கூடிய ஒரு பத்திரிகையாக இது வெளிவருகின்றது. இதை இன்னும் முன்னோக்கி எடுத்துச் செல்வது மக்களாகிய உங்கள் கையில் தான் இருக்கின்றது. இப்பத்திரிகையை வளர்த்தெடுங்கள். பயன்பெறுங்கள். உங்கள் அனைவரையும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகின்றேன்.

இறையாசிருடன் ஆசிரியர்



# இறப்பால் சிறப்புறும் பிறப்பு

"நாம் கற்றுக்கொள்வதற்காக இறைவன் குழந்தை செல்வங்களைக் நமக்குக் கொடுத்துள்ளார். பலவற்றை நாம் கற்றுக்கொள்ள இறைவனால் கொடுக்கப்பட்ட புனிதக் குழந்தை தான் அன்னை மரியா. அக்குழந்தையின் பிறந்த நாளைத்தான் நமது தாயாம் திருஅவை இம்மாதம் 8ந் திகதி கொண்டாடுகிறது.

பிறப்பு ஒரு சம்பவம் என்றால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்கவேண்டும் என்பது பலர் கருத்து. ஆனால் கன்னிமரியின் பிறப்பு ஒரு சம்பவம் அல்ல பிறப்பே ஒரு சரித்திரமாகும். அன்னா சுவக்கீன் இருவருக்கும் முதுமை வரை குழந்தை பேறு இல்லை. இவ்விருவரும் இடைவிடாமல் இறைவனிடம் தொடர்ந்து வேண்டியதன் பயனாக வானதூதர் அவர்களுக்குத் தோன்றி இறைவன் அவர்களுக்குத் தரவிருக்கும் குழந்தை பேறு பற்றியும் அக்குழந்தையின் எதிர்காலம் குறித்தும் கூறினார் என்று புனித யாக்கோபு தன் நற்செய்தியில் எழுதியுள்ளார்.

பெரும்பாலான நேரங்களில் பெற்றோர்களின் வழியாகவே குழந்தைகள் அறியப்படுகின்றனர். ஆனால் வரலாற்றில் வாழும் நபர்களின் வாழ்வில் இது நேர்மாறாக உள்ளது. குழந்தைகளின் வாயிலாகவே பெற்றோர் அறியப்படுகின்றனர்.

உதாரணமாக வேதாகமத்தில் சக்கரியா எலிசபெத் இவர்கள் திருமுழுக்கு யோவானால் அறியப்படுகின்றனர். சுவக்கீன் அன்னம்மாள் இவர்கள் அன்னை மரியாவால் அறியப்படுகின்றனர். அதுபோலவே அன்னை மரியாவும், யோசேப்பும், இயேசுவால் அறியப்படுகிறார்கள். காரணம் குழந்தைகளின் வாழ்வு அவர்களின் பெற்றோரை உலகிற்கு அறிமுகம் செய்து வைக்கும் வாழ்வாக அமைந்திருக்கிறது. அவர்கள் உலகம் வியக்கும்படி வாழ்ந்தால் தான் அவர்களைப் பெற்றவர்களும் இன்று நினைவுகூறப்படுகின்றனர்.

புரட்டாதி மாதம் என்றாலே நம் மனதில் தோன்றுவது அன்னையின் பிறந்தநாள் தான். 20 வருட காலம் காத்திருந்து இறைவனால் கொடுக்கப்பட்ட, ஏவப்பட்ட பொக்கிஷம் அன்னை மரியா காத்திருப்பதிலும் ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது.

### இவ்விழா உணர்த்தும் உண்மைகள்

இன்றைய விழாவின் வழிபாட்டு செபங்கள், பாடல்கள் போன்றவற்றை உற்றுநோக்கினால் இரண்டு உண்மைகள் அங்கு இழையோடுவதைக் காணலாம். ஒன்று மரியா இறைவனின் தாய் என்பது, மற்றொன்று அவரது மனிதத் தோற்றம்.

1. மரியா இறைவனின் தாய் என்பதைப் பாடல்களில் இடம்பெறுவதைப் பார்க்கின்றோம். "அன்னை மரியாவின் பிறப்பு விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோமாக. ஏனெனில் அவரிடமிருந்து நீதியின் கதிரவனாகிய நம் இறைவன் கிறிஸ்து உதயமானார்" என்று வருகைப் பல்லவியிலும், "புனித கன்னிமரியே நீர் பேறுபெற்றவர், புகழனைத்திற்கும் மிக ஏற்றவரும் நீரே, ஏனெனில் என் இறைவன் இயேசு கிறிஸ்து, நீதியின் ஆதவனாய் உம்மிடமிருந்து உதயமானார்" என்று அல்லேலூயா கீதத்திலும், "இதோ கன்னி ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்று திருவிருத்துப் பல்லவியிலும் புகழ்ப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.


பிறப்பு ஒவ்வொன்றும் மகிழ்ச்சிக்குக் காரணமாகிறது. உயிருள்ள இறைவனுக்கு நன்றி செலுத்தத் தூண்டுகிறது. ஏனெனில், இறைவன் புதிதாய்ப் பிறந்த பிறவிக்கு வாழ்வளித்து, அதே தமது நிலையான வாழ்வில் பங்குகொள்ள அழைக்கிறார். மரியாவின் பிறப்பு திருச்சபையில் சிறப்புமிக்க மகிழ்ச்சிக்கும், நன்றி செலுத்துதலுக்கும் காரணமாகிறது. உற்பவத்திலிருந்தே மரியா தூய ஆவியால் நிரப்பப் பெற்றார். எனவே, பிறக்கும்போதே மரியா இறைவனின் மகளாய்ப் பிறக்கிறார், இறைவனின் ஒரே பேறான திருமகனும், தம் மீட்பருமானவருக்குத் தாயாக இருக்கும்படி அழைக்கப்பெறுகிறார்.

இறைவனுக்கு தாயாக வேண்டியிருந்ததால் அன்னை மரியாவின் பிறப்பு மாந்தர் அனைவரின் "மீட்பின்...

☛ 15

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# இலங்கை மண்ணிலே டிலாசால் அருட் சகோதரர்கள் காலடி பதித்த 150 வது வருட ஜுபிலி விழா

## பலரை நல் வழியில் திரும்பியவர்கள் வானத்தின் ஒளியைப் போலும், விண்மீன்களைப் போலவும் என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் பட்டொளி வீசுவார்கள்! (தானி 12:3)

**மலருக்கோ ஒரு மணம்! தென்றலுக்கோ ஒரு மென்மை! ஒரு மாட்சி! கல்வியிலோ பெரு மலர்ச்சி! சுவையிலோ பெரு மாண்பு! கல்வி வழியிலே கடவுளைக் கண்டவர், வாடிய இளம் பயிர்களுக்கு வான்மழையாக நிறைந்தவர் அவர்தான் டிலாசால் துறவற சபையை நிறுவிய தூய ஜோண் பப்ரிஸ்ட் டிலாசால்**

பலவகைப்பட்ட மாணவர்கள் ஒன்று கூடி திறந்த தெளிந்த மனத்துடன் ஒருவரை ஒருவர் மதித்து, ஒருவர் ஒருவருடைய உரையாடல்களுக்கு வாய்ப்பளித்து அவரவர் தன்மைக்கு ஏற்ப அவர்களுக்கு அறிவு புகட்ட முற்படும் நிறுவனமே கல்விச்சாலை அது ஒரு உணர்வு கூடம். அங்கு அவர்களுக்கு சகோதரத்துவம், சமத்துவம், சமய தத்துவம் என்பவற்றைக் கற்றுக் கொடுத்திடல் வேண்டும். புது உலகிற்கேற்ப தம்மை மாற்றியமைக்கவும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் தம் மதத்திலே வேரூன்றி நின்றிட மறைக்கல்வியும் கற்பித்திடல் வேண்டும். இதன் நோக்கமாகவே அன்று கல்வி சாலைகள் நிறுவப்பட்டன.

17ம் நூற்றான்றிலே மூவகைப்பட்ட பாடசாலைகள் பிரான்ஸ் தேசத்தில் நடைமுறையில் இருந்தன. அவை ஆரம்பப் பாடசாலை (Little School), எழுத்துப் பாடசாலை (Writing School), அன்புப் பாடசாலை (Charity School), என்பனவாகும். ஆரம்பப் பாடசாலைகளிலும், எழுத்துப் பாடசாலைகளிலும் பணிபுரியும் ஆசிரியருக்கு



ஊதியம் அவர்களின் மாணவர்களிடம் இருந்தும் பெறும் பாடசாலைக் கட்டணமே (School Fees). அன்புப் பாடசாலைகள், அருட் தந்தையர்களின் கண்காணிப்பில் இருந்தன. இவ்வன்புப் பாடசாலைகளை நடத்த வந்த தியாக உள்ளம் படைத்தவர்களைக் கொண்டு தூய டிலாசாலால் நிறுவப்பட்ட சபைதான் கிறிஸ்தவப் பாடசாலைகளின் **சகோதர சபை அல்லது டிலாசால்** சபை ஆகும்.

17ஆம் நூற்றாண்டில் ஆசிரியராகப் பணிபுரிவது சமுதாயத்தில் விலக்கப்பட்ட ஒரு தாழ்ந்த தொழிலாகத்தான் கருதப்பட்டது. அப்பணி புரிய வந்த ஆசிரியர்கள் கூட தகுதியற்றவர்களாக இருந்தனர். அவ்வாறு பணி புரிய வந்தாலும் அவர்கள் அப்பணிக்கு முதலிடம் கொடுக்காமல் இருந்தனர். அருட்தந்தையர்களின் கண்காணிப்பில் இருந்ததால் அவர்கள் பயந்து, சுதந்திரமாகவும், மனத்துணிவுடனும் எதையும் சொல்லவும், செய்யவும் முடியாமல் தத்தளித்தனர். ஆசிரியர் கொண்டுள்ள இழிவைப் போக்க வேண்டும், அதனை மாற்ற வேண்டும். மாற்றினால் தான் சமுதாயம் புத்துணர்வு பெற்று இளம் தளிர் விட்டு வளரும் என்று உணர்ந்த தலைவன் தூய டிலாசால் எல்லாக் காலங்களுக்கும் எல்லா நாடுகளுக்கும் மேலாக நன்மதிப்புப் பெற்று ஒளி வீசிடும் சுடராகப் புகழ்பெற்றவரானார்.

**மரபு வழுவா, தனிநபர் கல்விப் போதனா முறையை** (Individual Method) நூற்றாண்டுகளாக கடைப்பிடித்து வந்த பிரான்ஸ் தேசம் தன் மரபை முறித்து, **பொதுக் கல்வி போதனை முறை** (Simltaneous Method) யைப் பெற்று மாணவர்களின் கல்வி அறிவுக்கேற்ப பிரித்துத் தனித்த ஒரு ஆசிரியரையும் கொடுத்துப் புதிய காலக் கல்வி முறைக்கு வித்திட்ட பெருமை தூய டிலாசாலையே சாரும். பாடசாலைகளிலே ஆசிரியருடன் இணைந்து செல்லவும், மாணவர்களுடன் பொறுப்புணர்ச்சியை வளர்க்கவும் இவர் **வகுப்புத் தலைவர்** (Monitor) **மாணவர் தலைவர்** Prefect System, தேர்ச்சி அட்டை முறை Report Card System போன்றவற்றை உருவாக்கி மாணவரை விழிப்புடன் இருக்கச் செய்வித்தார். மாணவர் தம் தாய் மொழியிலேயே கல்வி கற்றிட வேண்டும் எனக் கூறிச் செயலாற்றியவரும் தூய டிலாசாலே ஆகும்.

இன்றைய முதியோர் கல்வித் திட்டத்தைப் போல அன்று (17ஆம் நூற்றாண்டில் கல்வி அறிவின்றி இருந்த பாட்டாளிமக்களுக்கு **ஞாயிறு போதனை** (Sunday Class) தோற்றுவித்துப் பெரும் வெற்றி கண்டு



நம் முதியோர் கல்வித் திட்டத்தினையும், ஞாயிறு மறைக்கல்வியையும் தோற்றுவித்தவர் தூய டிலாசாலே ஆவார்.

கல்வியறிவூட்ட வந்திருக்கும் ஆசிரியர்கள் கல்வியறிவு நிறையப் பெற்றிடல் வேண்டும். மாணவர் சமுதாயத்திற்கு ஒழுக்கக் கல்வியைப் புகுத்த முதலில் ஆசிரியர்கள் பல நற்குணங்களைப் பெற்றிருத்தல் வேண்டும். பல வகைப்பட்ட மாணவர்களுடன் பழகுவதற்கும், அவர்கள் தவறினைத் திருத்துவதற்கும் ஆசிரியர்கள் தெரிந்திருக்க வேண்டும். இதனை மனதுள் வைத்து இப்பணிபுரிய வருவோரிடம், இதனைக் கற்பித்திட ஒரு நிறுவனம் நிறுவிட எண்ணி 17ஆம் நூற்றாண்டில் **ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை** யைத் தொடங்கியவரும் இவரே. இச் சகோதரர்களின் பாடசாலையின் வகுப்பறையில் பாடுபட்ட இயேசுவின் திருச்சிலுவை தொங்க விடப்பட்டிருக்கும். மாணவர்கள் அதற்கு மரியாதை செய்வது வழக்கம். அது மட்டுமல்லாது இப்பாடசாலைகளில் கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கே முக்கியம் கொடுக்கப்பட்டிருந்தமையினால் இச்சபைச் சகோதரர்களுக்குக் கிறிஸ்தவ பாடசாலைகளின் சகோதரர்கள் சபை (The Brothers of the Christian School) என்ற பெயரும் வழங்கப்படலாயிற்று.

இவ்வாறு ஏழைச் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்த ஒரு சபையையும் உருவாக்கித் தன்னால் இயன்ற பணியை ஆற்றி வாழ்ந்து 1719ஆம் ஆண்டு சித்திரை மாதம் 7ஆம் திகதி இறைவனடி எய்தினார். 1680ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட டிலாசால் சபையின் வளர்ச்சி கண்டு திருத்தந்தை 13ஆம் ஆசிர்வாதப்பர் 1725ஆம் ஆண்டில் இச்சபையை அங்கீகரித்தார். 1888ஆம் ஆண்டு தூய டிலாசாலுக்கு திருச்சபையானது **முத்திப் பேறுபெற்ற பட்டம்** கொடுத்தது. பின்னர் 1900ஆம் ஆண்டில் திருத்தந்தை 13ஆம் சிங்கராயரால் இவருக்கு **தூயவர் பட்டம்** கொடுக்கப்பட்டது. இவர் தூயவராக அறிவிக்கப்பட்டு 50 ஆண்டுகளின் பின் திருத்தந்தை 12ஆம் பத்திநாதரால் 1950ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15ஆம் திகதி அகில உலக ஆசிரியர்களின் பாதுகாவலராக தூய டிலாசால் அறிவிக்கப்பட்டார்.

புதிய உலகிலே வழிதெரியாத இம்மண்ணவர்க்கு நற்கல்விதனைப் புகட்டவேண்டும். ஆசிரியர் நல்வாழ்வுதனை வளப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தைத் தன் வாழ்வின் கலங்கரை விளக்காய்க் கொண்டு கல்வியுலகிலே நற்பணியாற்றியவர் அவரது அயரா உழைப்பினைப் பாராட்டி நம் கத்தோலிக்கத் திருச்சபை அவரை அகில உலக கத்தோலிக்க ஆசிரியர்களின் பாதுகாவலராக நியமித்து இன்று 69 ஆண்டுகள் கடந்து விட்டன.

அவர் வழி தொடரும் அருட்சகோதரர்கள் இலங்கை மண்ணிலே காலடி வைத்து இன்று 150 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. அதுமட்டுமல்லாது தூய ஜோண் பப்ரிஸ்ட் டிலாசால் இவ்வுலகை விட்டு நீங்கி 300 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. எனவே தமது வருகையின் 150 ஆண்டு நிறைவு விழாவையும் தூய ஜோண் பப்டிஸ்ட் டிலாசாலின் இறப்பின் 300வது ஆண்டு விழாவையும் இவ்வாண்டு நிறைவு கூறுகின்றனர். அதன் அடையாளமாக இறைவனுக்கு நன்றி கூறி நன்றித் திருப்பலியை புரட்டாதி மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவர்களின்தாய் இல்லமான கொழும்பு 15ல் அமைந்துள்ள டிலாசால் இல்லத்தில் கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் அதி. மேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கவுள்ளனர்.

இவ்வேளை டிலாசால் அருட்சகோதரர்களின் உலகத் தலைவர் (Superior General) மேன்மைதங்கிய அருட்சகோதரர் றொபேர்ட் ஷுலர், அருட் சகோதரர் ஆர்மின் லுயிஸ்ரோ மாகாணத் தலைவர், கிழக்கு ஆசிய லாசாலியப் பகுதி பிரசன்னமாகி இருப்பார். இவ்வேளையில் கடந்த 150 ஆண்டுகளாக இலங்கை மண்ணிலே இறைவனின் ஆசீர்வாதத்தினால் தம்மால் செய்ய முடிந்த பணியினை நினைத்துப் பெருமிதம் அடையும் இவ்வேளையில் லசாலியப் பணி இம்மண்ணிலே தொடர தாம் நடந்து வந்த பாதையினைத் திரும்பி பார்த்து இலங்கைத் திருச்சபையோடு இணைந்து தமது உடன் பணியாளர்களான லசாலியக் குழுவோடும், மாணவர்களோடும் தமது மகிழ்வையும், நன்றியுணர்வையும் தெரிவிக்கின்ற இவ் வேளையில் அவர்கள் நடந்து வந்த பாதையினைச் சற்றுத் திரும்பிப் பார்ப்போம்.

1866ம் ஆண்டு இலங்கை திருச்சபையின் பேராயராக இருந்த அதிவந்தனைக்குரிய ஆயர் கிலேரியன் சில்லாணி (OSB) அவர்களின் அன்பான அழைப்பின் பேரில் 1867ம் ஆண்டு தை மாதம் தூய ஆசீர்வாதப்பர் சபைக் குருக்களால் நடாத்தப்பட்ட தூய ஆசீர்வாதப்பர் கல்லூரியின் இலங்கை மண்ணிற்கு முதன் முதலாக வந்த பிரான்சு தேசத்தைச் சேர்ந்த மூன்று அருட்சகோதரர்கள் உத்தியோக பூர்வமாகப் பெற்றுக்கொண்டனர். ஆனால் எதிர்பாராதவிதமாக இச் சகோதரர்கள் மூவரும் ஆங்கில மொழியிலே பாண்டித்தியம் பெற்றிராத காரணத்தினால், ஆங்கில மொழியிலே பாடசாலை நிர்வாகத்தை நடாத்துவதில் பல நெருக்கடிகளை எதிர் நோக்கியதன் காரணத்தினால் தமது பணியில் இருந்து பின்வாங்கி இம்மண்ணை விட்டு அதே ஆண்டு ஆவணிமாதம் வெளியேறினர். இருப்பினும் ஆயரினதும் ஏனைய பல எதிர்பார்ப்போடும் இருந்தவர்களினதும் விடா முயற்சியோடு ஆங்கில மொழியினைக் கையாளக்கூடிய சகோதரர்களின் உதவியோடு மீண்டும் 1868ம் ஆண்டு அக்கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பினையும் லசாலியப் பணியினையும் வைகாசி மாதத்திலே தொடக்கினர். அன்று தொடங்கிய இப்பணி இன்றுவரை இலங்கை மண்ணிலே தொடர்ந்து ஆற்றப்படுவதின் நூற்றிஐம்பதாவது ஆண்டு நிறைவு இவ்வருடத்தில் (2018) கொண்டாடப்படுவது பொருத்தமுடையதாகும்.

தம்முடைய பணியில் ஆர்வத்தோடும், விருப்பத்தோடும் செயற்பட்டதின் காரணமாக இலங்கையின் கல்வி வரலாற்றில் முக்கிய இடத்தினைப் பெற்று பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படக் கூடியவர்களாயினர். 19ம் நூற்றாண்டின் இறுதியில் அருட்சகோதரர்கள் கொழும்பில் கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், நீர்கொழும்பு போன்ற இடங்களில் தமது பணியை விஸ்தரித்தனர். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேற்படி சகோதரர்கள் கொழும்பு மாவட்டத்தில் முகத்துவாரத்தில் உள்ள டிலாசால் கல்லூரியையும், கிராண்ட்பாஸில் உள்ள தூய சூசையப்பர் கல்லூரியையும். நீர்கொழும்பிலுள்ள தூய மரியாள் கல்லூரியையும், பண்டாரவளையில் உள்ள தூய சூசையப்பர் கல்லூரியையும் தம் பொறுப்பில் வைத்திருந்தனர். அதுமட்டுமல்லாது நகர்ப்புறத்தில் உள்ள ஏழைகளின் தேவைகளைக் கருத்திற் கொண்டு தமது சபை ஸ்தாபகரின் எண்ணத்தைப் பின்பற்றி கொழும்பு புறக்கோட்டையில் 1920ம் ஆண்டில் தூய மரியாள் கல்லூரியை ஆரம்பித்தனர். ஆனால் கொழும்பு நகர்புற விஸ்தரிப்புப் பணியின் போது அதனைத் தொடர முடியாமல் 1940ம் ஆண்டில் அதனைக் கைவிட்டனர். அதே போன்று காலப்போக்கில் பல்வேறு பிரச்சனைகளையும் அசௌகரியங்களையும் எதிர் நோக்கியதன் காரணமாக

ஆக்கம் : அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்



நீர்கொழும்பிலும், பண்டாரவளையில் இருந்தும் தமது பணியைப் கைவிட்டனர். இலங்கையின் சுதந்திர தினத்திற்கு முன்பாக சுமார் ஏழு ஆங்கில மொழிமூலப் பாடசாலைகளை கொழும்பு நகருக்கு அப்பால் ஆரம்பித்தனர். அன்றைய நாளில் லசாலியன் கல்வித்திட்டமானது ஒரு புது முறையாக இருந்ததினால் அதன் புகழ் நாடெங்கும் சிறகடித்துப் பறந்தது. தொடர்ந்து வந்த ஆயர்களின் அழைப்பின் பேரில் சகோதரர்கள் தமது பாடசாலைப் பணியை இலங்கையின் வடக்கு மேற்கு மாகாணங்களில் விஸ்தரித்து குருநாகல், சிலாபம், கந்தானை, மொறட்டுவ, வத்தளை, இறாகம, மன்னார், நுவரெலியா, புத்தளம் போன்ற பகுதிகளில் பணியாற்றத் தொடங்கினர். ஆனால் காலப்போக்கில் சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்தின் முக்கியத்துவம் குறைந்து சுதேச மொழிகளான...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

இன்று நிறைய இளைஞர்கள், "நினைத்தால் வாழலாம்" என நினைக்கின்றார்கள். அது தவறு. "உழைத்தால் வாழலாம்" என்பதே சரியானது. உழைப்பினால் மட்டும்தான் ஒரு நாட்டில் செல்வம் பெருகும். வெற்றி என்பது 98 வீதம் வியர்வை சிந்தும் உழைப்பு, 2 வீதம் காரியத்தை முடிக்க வேண்டும் என்ற ஊக்கம். ஒருவருக்குக் கிடைக்கும் புகழ், செல்வம், மதிப்பு போன்றவை அவனுடைய புத்திசாலித்தனமான உழைப்பைப் பொறுத்துத் தான் அமையும். மற்ற எந்த உறுப்பிற்கும் இல்லாத ஒரு சிறப்பு நம் கைக்கும் காலுக்கும் அமைந்திருக்கிறது. என்ன சிறப்பு தெரியுமா? கைகளில் உள்ள பத்து விரல்களுக்கும் கால்களில் உள்ள பத்து விரல்களுக்கும் நகம் என்ற மகுடம்



# உழைத்தால் வாழலாம்




சூட்டப்பட்டிருக்கிறது. ஏன் தெரியுமா? அவற்றின் உழைப்பைப் பாராட்டி அவற்றின் கடுமையான உழைப்பிற்கு இயற்கை தரும் பரிசு. அத்தகைய உழைப்பின் பெருமையை ஒரு நாட்டுப்புறக் கதை மிக அழகாக விளக்குகின்றது. அக்கதை வருமாறு;

ஒருமுறை ஓர் அரசன் மாறுவேடம் புனைந்து பல ஊர்களுக்குச் சென்றான். அப்போது ஒரு கிராமத்தில் ஒரே ஒரு பெண் மட்டும் மர நிழலில் அமர்ந்து, கூடை பின்னிக் கொண்டிருந்தாள். அரசன் அவளை நெருங்கி, "அம்மா! நீ மட்டும் இங்கே தனியே கூடை பின்னிக் கொண்டிருக்கிறாயே! வேறு ஒருவரையும் இந்தக் கிராமத்தில் காணோமே! அவர்கள் எல்லோரும் எங்கே போயிருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

"அரசரைத் தரிசிக்கப் போயிருக்கிறார்கள்" என்றாள் அந்தப் பெண். "அரசரைத் தரிசிக்க நீ ஏன் போகவில்லை" என்று வினவினான் மன்னன். "செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து முடிக்காமல் முட்டாள்கள் தாம் அரசரைத் தரிசிக்கப் போவார்கள்" என்று மறுமொழி சொன்னாள் அந்தப் பெண்.

"அரசரைத் தரிசிப்பதால் பயன் ஒன்றும் கிட்டாது என்பது உன் கருத்தா?" என்று கேட்டான் அரசன். "பயன் கிட்டுமோ கிட்டாதோ? அதை நான் அறியேன். எனக்கு ஐந்து குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை உதறித் தள்ளிவிட்டு, ஒரு நாள் வேலையைப் பாழ்படுத்திக் கொண்டு, அரசரைக் காணச் செல்வது மதியீனம் ஆகாதா?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

பெண் இப்படிச் சொன்னதும் அரசன் மகிழ்ச்சி அடைந்தான். அந்தப் பெண்ணின் கையில் ஒரு தங்க நாணயத்தைக் கொடுத்து, "பெண்ணே இந்தத் தங்க நாணயத்தை நான் தந்த பரிசாக வைத்துக் கொள். அரசனைத் தரிசிக்கச் சென்றவர்கள் திரும்பியதும் அரசன் வந்து உன்னைத் தரிசித்துவிட்டுச் சென்றான் என்று அவர்களிடம் சொல்" என்று கூறி விடைபெற்றுக்கொண்டு திரும்பினான்.

"உழைப்பினால்தான் ஒரு நாட்டின் செல்வம் பெருகுமேயல்லாது, வீண் ஆடம்பரங்களால் ஒரு நாட்டின் செல்வம் பெருகிவிடாது" என்னும் உண்மையை அப்பெண்ணின் வாய்மொழி மூலம் தெரிந்துக்கொண்டு அரண்மனை திரும்பினான் அரசன்.

இன்று உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரர்களாக இருப்பவர்கள் எல்லோருமே, சாதாரண நிலையில் இருந்து தம் கடுமையான உழைப்பினால் முன்னேறியவர்கள்தாம். ஒரு கணனி வாங்குவதற்குக் கூட பணம் இல்லாமல் துன்பப்பட்டவர்தான் பில்கேட்ஸ். இன்று அவர் கணனி உலகில் முடிசூடா மன்னர். காரணம் - அவரது அயரா உழைப்பு! அறிவுத் திறனானது சரியாகப் பயன்படுத்தியது!

அமெரிக்க நாட்டின் புகழ்பெற்ற தொழிலதிபர் கோடீஸ்வரர் இராக்பெல்லரிடம் "உங்கள் முன்னேற்றத்தின் இரகசியம் என்ன?" என்று கேட்டபோது "உண்மையில் நான் எந்த அற்புதத்தையும் செய்யவில்லை. வாழ்க்கையில் முன்னேறவேண்டும். சமூகத்தில் ஓர் உயர்ந்த அந்தஸ்தினைப் பெறவேண்டும் என்று நான் நம்பிக்கையுடன் கனவு கண்டேன். அந்தக் கனவை நனவாக்க, திட்டமிட்டுக் கடுமையாக உழைத்தேன். வாழ்க்கையின் எளிதாக முன்னேற முடிந்தது" என்றாராம்.

அதே இராக்பெல்லர், கோடீஸ்வரர் ஆன பின்பும் வயதான நிலையிலும் உழைத்துக் கொண்டே இருந்தார். ஒரு சமயம், விமானத்தில் சென்று கொண்டிருக்கும்பொழுது, பக்கத்தில் இருந்த ஓர் இளைஞன், "கோடிக்கணக்கில் வருமானம் வரும்போது பேசாமல் ஓய்வு எடுக்கலாமே" என்று கேட்டான். இதற்கு இராக்பெல்லர், "நாம் பயணம் செய்து கொண்டிருக்கும் இந்த விமானத்தை விமானி ஒரு நிலையான உயரத்தில் பறக்க வைத்திருக்கிறார். வீணாக அதற்கு எஞ்சினை இயக்க வேண்டும் என்று எஞ்சினை நிறுத்தினால் என்ன ஆகும்?" என்று இளைஞனிடம் கேட்டார்.

"விபத்து ஏற்படும்" என்றான் இளைஞன். "வாழ்க்கைப் பயணமும் அப்படித்தான். உழைத்துக்கொண்டே இருக்கவேண்டும். உழைப்பு நின்றால் ஆபத்து. உழைப்பானது வருமானத்தை மட்டுமே தருவதாக நினைக்கக்கூடாது. உடல் ஆரோக்கியத்திற்கும் மனமகிழ்ச்சிக்குக் கூட அது உதவுகிறது" என்று கூறினாராம் இராக்பெல்லர்.

ஆம், இளைஞர்களே! "நினைத்தால் வாழலாம்" என நினைப்பது தவறு. "உழைத்தால் வாழலாம்" என்பதே சரியானது.

**"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்"**

என்னும் வள்ளுவர் வாய்மொழிதான் உண்மை. எனவே,

**விழித்துக்கொண்டே இருப்போம் – நம் நாட்டை**
**"வளரும் நாடு" என்னும் நிலையிலிருந்து**
**"வளர்ந்த நாடு" ஆக உருவாக்குவோம்**
**தகுதியால் நம்பிக்கையால், குறிக்கோளால், திட்டத்தால்**
**உழைத்து முன்னேறுவோம்.**

# சுடர் விட்டெரியும் ஒளிவிளக்கு!



புகழை எதிர்பார்த்து காற்று சுவாசிக்கக் கொடுப்பதில்லை. கவுரவத்தை எதிர்பார்த்து ஆதவன் ஒளியைத் தருவதில்லை. மதிப்பை எதிர்பார்த்து பூமி உலகின் உயிர்களைத் தாங்குவதில்லை. காற்று, ஆதவன், பூமியைப் போன்றே தியாக உள்ளம் படைத்தவர்தான் புனித அன்னை திரோசா. தனக்கென வாழ்வதை நிராகரித்து பிறர்க்கென வாழ்வதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார். கண்ணீர் வழிகிற வழிகளைத் தேடிச் சென்று துடைத்தார். ஆகவேதான் வாழ்கின்றபோதே புனிதையாகப் போற்றப்பட்டார். இறப்பிற்குப் பின்னும் கோடானு கோடி மக்களின் இதயங்களில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். புனித அன்னை தெரசாவுக்கு புனிதர் பட்டம் கிடைக்காதாவென உலகினர் ஏங்கிக் கொண்டிருக்க, புரட்டாதி 4ம் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவரை புனிதர் நிலைக்கு உயர்த்துவதாக அறிவித்து உலக மக்களை மகிழ்வித்துள்ளார் அன்னையும் புனிதரானார்.

## இளமைப் பருவம்

அன்னை திரேசாவின் இயற்பெயர் ஆக்னஸ். 1910 ஆவணி 26இல் அப்பேனியா நாட்டில் ஸ்காப்ஜே என்னும் சிற்றூரில் பிறந்தார். ஆக்னசின் குடும்பம் ஒரு வசதி படைத்த வியாபாரக் குடும்பம். இருப்பினும் சமூகச் சேவையில் அதிக ஆர்வம் கொண்டிருந்ததால் 12வது வயதில் அயர்லாந்தில் டப்ளின் என்ற நகரிலுள்ள லொரேடா கன்னியர் மடத்தில் சேர்ந்து, தனது துறவற வாழ்வை ஆரம்பித்தார். 19வது வயதில் கடல் கடந்து கொல்கொத்தாவிற்கு வந்தார். 29வது வயதில் நித்திய வார்த்தைப்பாடு மூலம் துறவற வாழ்க்கையில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார்.

கொல்கொத்தா எண்டலியில் உள்ள புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாகவும், பிறகு தலைமை ஆசிரியையாகவும் பணியாற்றினார். கொல்கொத்தா வீதிகளில் மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்ட ஆதரவற்ற அனாதைகள், குஷ்டரோகிகள், இறக்கும் தருவாயில் கைவிடப்பட்ட முதியோர், வீதியில் வீசியெறியப்பட்ட குழந்தைகள் போன்றவர்களுக்கு சேவைபுரியும் நோக்கத்துடன் தனது 35வது வயதில் லொரேடா சபையை விட்டு வெளியேறி சாதி, மத, இன வேறுபாடின்றி அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பணிபுரியும் ஆர்வத்துடன் 1948இல் "பிறரன்புத் தொண்டர்கள் சபை" என்னும் கத்தோலிக்கக் கன்னியர் சபையைத் தொடங்கினார்.

## சேவை அமைப்புக்கள்

கொல்கொத்தா மாநகரில் காளிகட்டிலுள்ள காளி கோவிலின் பக்கத்தில் இருக்கும் தர்மசாலையில் முதன் முதலில் தனது பணியைத் தொடங்கிய அன்னையின் சேவை நிறுவனம், பின்னர் இந்தியாவிலுள்ள எல்லாப் பெருநகரங்களிலும், எமது நாட்டிலும் பல இடங்களிலும், காலி மறைமாவட்டத்தில் எல்பிட்டிய எனும் இடத்தில் அன்னைக்கான ஒரு புதிய ஆலயமும் கட்டப்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் நாடான சீனா உட்பட126 உலக நாடுகளிலும், மொத்தம் 561 இல்லங்களாகப் பரவிப் பெருகியது.

ஏறத்தாழ 4600 கன்னியர்கள் தன்னலமற்ற உள்ளத்துடன் பணிபுரிந்து வருகின்றனர். அன்னையின் முக்கியப் பணித்தலங்கள் என்று எடுத்துக் கொண்டால் நிர்மல இருதயம், மரிப்போர் இல்லங்கள், சாந்தி இல்லம், தொழுநோயாளர் இல்லங்கள், சிசுபவன்கள் எனப்படுகிற குழந்தைக் காப்பகங்கள், மறுவாழ்வு இல்லங்கள். சமூகத்தால் கைவிடப்பட்ட அபலைப் பெண்கள் மறுவாழ்வு, மனநலமுற்றோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் நிலையங்கள், சமூகச் சேவை மையங்கள், மருந்தகங்கள், தொழிற்பயிற்சிக் கூடங்கள் போன்றவற்றைச் சொல்லலாம். அன்னையை ஒருமுறை சந்தித்த எத்தியோப்பிய நாட்டு பிரதமர் இப்படிக் கூறினார். "அந்நிய நாட்டு கிறிஸ்தவ மிஷனரிகள் அனைவரையும் எங்கள் நாட்டை விட்டு வெளியே விரட்டினாலும், மிஷனரிஸ் ஆப் சாரிட்டி கன்னியர்களை மட்டும் எங்கள் நாட்டிலேயே தங்க அனுமதிப்போம்". கடின மனம் படைத்தவர்களையும் கரைக்கும் சக்தி அன்னை திரேசாவுக்கு உண்டு என்பதற்கு இது ஒரு சான்று,

## அன்னையின் புதுமைகள்

மோனிக்கா பெஸ்ரா ஓர் இந்தியப் பெண்மணி. வயிற்றில் அவருக்கு ஒரு பெரிய கட்டி குணப்படுத்த முடியாது என்று மருத்துவர்கள் கைவிரித்து விட்டனர். அன்னையின் பரிந்துரைக்காக நாடினார் பெஸ்ரா. அப்பெண்மணி நலம்பெற அன்னையின் பரிந்துரைச் செபம் பெரிதும் உதவ, திரும்பவும் சோதித்துப் பார்த்த மருத்துவர்கள் கட்டி மறைந்திருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். அன்னைக்கு அருளாளர் பட்டம் வழங்குவதற்கு இந்நிகழ்ச்சியே ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அன்னையை அவதூறு செய்வதையே வாடிக்கையாகக் கொண்டிருந்த கிறிஸ்டோபர் ஹிச்சன்ஸ் என்னும் ஆங்கிலப் பத்திரிகையாளர் மனம் திருந்துவதற்கும் இந்நிகழ்வே காரணமாக அமைந்தது.

மேற்கு வங்காளத்தின் ரைகஞ்சு என்னும் ஊரில் அன்னையின் சீடர்கள் சேவைபுரியும் ஓர் இல்லம். அவ்வில்லத்தில் வயிற்றில் கட்டியுடன் இறக்கும் தருவாயில் ஒரு நோயாளி. அன்னையின் உருவம் பொறித்த புத்தகம் ஒன்று அந்நோயாளியின் வயிற்றில் வைக்கப்பட்டது. உடனே அவர் குணமடைந்தார். சோதித்துப் பார்த்த மருத்துவர்கள் வாயடைத்துப் போயினர். புருஸ்லியா என்னும் ஊரில் கத்தோலிக்கப் பள்ளியொன்றில் செவிலியாக பணிபுரிந்தவர். 72 வயது சகோதரி ரீத்தா மஸ்கரேனாஸ்டு குடலிறக்க நோய்க்காக அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருந்தபோது மருத்துவர்கள் தவறுதலாக அவரின் நரம்பைச் சிதைத்துவிட்டனர். இடுப்பிற்குக் கீழே உறுப்புகள் செயலிழந்து போயின. அன்னை தெரசாவின் கல்லறை மீது வைத்து எடுக்கப்பட்ட கைக்குட்டை ஒன்று சகோதரி ரீத்தாவிடம் கொடுக்கப்பட்டது. ரீத்தாவும் அந்தக் கைகுட்டையை இடுப்பில் சொருகிக் கொண்டார். இரண்டு வாரங்களுக்குப் பின் சகோதரி ரீத்தாவின் கனவில் தோன்றிய அன்னை "எழுந்து நட" என்றார். நோய் முற்றிலும் குணமாயிற்று. இரக்கமுள்ள இதயம் இறப்பிற்குப் பின்னும் இரக்கத்துடன் இயங்கிக் கொண்டேயிருக்கும் என்பதற்கு அன்னையின் புதுமைகளே சான்றுகள்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# தூய கன்னி மரியின் பிறந்த நாள் விழா

## புரட்டாதி - 08

## மண்ணில் தோன்றிய விண்மலர்



அன்னை மரியின் பிறப்பு இறை மீட்புத் திட்டத்தின் சிறப்பு - அற்ப பாவ மாசில்லாத அற்புதப் படைப்பு - இறைவன் வரைந்த தூய்மையின் வளர்ப்பு

அன்னாள் சுவக்கீன் தம்பதியர்க்கு அமல உற்பவியாய் ஜெனித்து அருள் தவப்-புதல்வியாய் வளர்ந்து மூன்று வயதில் ஆலயத்தில் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்டு, இறைத் திட்டங்களை இளமை முதல் தியானித்து தூய்மை, தாழ்ச்சி, கற்பை - தன் கண்மணி போல் காத்து நாளும் இறைப் பிரசன்னத்தில் இனிதே வாழ்ந்தவர் மரியா

இறைத்-திட்டத்தின்படி தூய ஆவியாரால் கருவுற்று இறைமகனுக்குத் தாயாய், திரு அவைக்குத் தூணாய் துணையாய் தினமும் நமக்கு - அவள் இணையில்லாப் பெருமை கூற இறைவன் கொடுத்த வாய்ப்பு எனக்கு! அன்னையின் பிறந்தநாள் - இவ் அவனிக்கு மீட்பைக் கொணர்ந்த நாள் - பாவத் தளையை களைந்த நாள் - சாவுக்கு சாவுமணி அடித்த நாள் சாத்தானின் தலையை மிதித்த நாள் “நாம் இறப்பினும் வாழ்வோம்” - என்பதை உலகிற்கு உரக்கச் சொன்ன நாள்

“நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்” என்று இறைவனால் தேர்ந்து கொள்-ளப்பட்டவள் மரியா. “நீ பிறக்கும் முன்பே உன்னை திருநிலைப்-படுத்தினேன்” (எரே 15)

“உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்” என்று இறைவன் சொன்ன பொழுதே இறைச் சிந்தனையில் பிறந்து விட்டவள். குறித்த காலத்தில் உலகின் பாவ இருள் விலக கொண்டு வரப்பட்ட விடிவெள்ளி (யோபு 38:32) வழிகாட்டும் நட்சத்திரம் கீழ்த்திசை விண்மீன் விண்ணக அரசியே ரோஜா மண்ணில் தோன்றிய விண்மலர்.

அடைப்பட்ட விண்ணக வாயிலைத் திறந்தவர். நம் மீட்பர் இறங்கி வந்த ஏணி நாம் விண்ணகத்திற்கு ஏறிச் செல்லும் ஏணியும் அவள் தான் - எனவே அன்னை வழியின்றி நமக்கு மீட்பில்லை

அவர் அன்பில் மிளர்ந்த இறைத் தாய்மை தூய்மையில் நித்திய கன்னிமை “என் அன்பே நீ முழுவதும் அழகே மறுவோ உன்னில் சிறிதும் இல்லை” (இ.... 4:7) “நீ தோட்டங்களின் நீரூற்று வற்றாத நீர் (அருள்) சுரக்கும் கிணறு லெபனோனின்று வரும் நீரோடை போல” (தி.ப 14:15)

இறையருள் வழிந்தோடும் வாய்க்கால் “வைகறை போல் தோற்றம் திங்களைப் போல் அழகு, ஞாயிறைப் போல் ஒளி பேரொளி போல் வியப்பார்வம் யாரிவள்

இறைவன் வார்த்தெடுத்த அழகோவியம் நம் அன்னை மரியாதான் “ஒபீரின் பெண் அணிந்து வடிவாக வலப்புறம் நிற்கின்றார் பட்டத்து அரசி

“அவளே இஸ்ரயேலின் பெரும் மாட்சி பிதாவின் செல்லக் குமாரத்தி சுதனின் தாய், தூய ஆவியாரின் தூய பத்தினி என்று தலைமுறைகள் வாழ்த்தும் தவப்புதல்விக்கு படைப்புகள் அனைத்தும், மகிழ்ச்சியால், புகழ்பாடல்கள் இசைக்கட்டும் கடல் அலைகள் ஆர்ப்பரிக்கட்டும். இசைக் கருவிகள் முழங்கட்டும் ஆலய மணியோசை ஒலிக்கட்டும்.

“மரியே வாழ்க” என்ற மக்களின் வாழ்த்தொலியோடு அன்னையின் கொடி வானில் உயரட்டும் - நம் வேண்டுதல்களை தம் மகனிடம் கொண்டு சேர்க்கட்டும்.

அன்னையின் பரிந்துரையால் ஆங்கோர் கானாவூர் நிகழ்வு நடக்கட்டும். “அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” (யோவா 2:5) என்ற அன்னையின் சொல்லுக்கு இசைந்து நடப்போம். அருள் வரங்களை நிறைவாய் பெறுவோம்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

## “விண்ணுலக அரசியே, மண்ணில் வாழ்வோரின் மாதரசியே, உமக்கு எமது பிறந்த நாள் வாழ்த்துக்கள்”

**வந்தோம் உம் மைந்தர் கூடி வாழ்த்துகிறோம்**
**எம் அன்னையை**
**வருகின்றோம் நாம் வாயாரப் பாடினோம்**
**எம் அன்னையை**
**வணக்கங்கள் தெரிவித்து வந்தனங்கள்**
**கூறினோம் எம் அன்னைக்கு**
**வல்ல தேவனின் அன்னைக்கு**
**பிறந்த நாள் வாழ்த்துக்கள்**

**மாசில்லாத்தாயே உம் மைந்தர்கள் நாம்**
**பெற்ற பேறு என்ன?**
**மாமரி அன்னையை எம் அன்னையாகப்**
**பெற்றதற்கு மாந்தர்கள் நாம் பாடினோம்**
**பிறந்த நாள் வாழ்த்துக்கள்**
**மாபரன் இயேசுவின் தாய்மரியை வணங்கினோம்**
**வாயார வாழ்த்தினோம்**

**தேவதாயே! தேவனின் தாயே! தினமும்**
**நாம் வேண்டுவது**
**தேவனுகுகந்தவர்களாய் நாம் வாழ திருவருள்புரிய**
**தேவாதி தேவனின் தெய்வீகத் தாய்க்கு**
**சாற்றினோம் வாழ்த்துக்கள்**
**தேவனின் தாயே வந்தனைகள் புரிந்து**
**வாழ்த்துகின்றோம்**

**கோடான கோடி மக்கள கொண்டாடுகின்றனர்**
**உம் பிறப்பை - கோடி அற்புதங்கள் புரியும்**
**சௌந்தரியே தாயே, கோமகள்,**
**இயேசுவின் தாயே கொண்டாடுவோம்**
**இவ்விழாவை கோடி மக்கள் குதூகலித்து**
**வாழ்த்துவோம் தாயே உம்மை**

**ஆயிரம் தீபங்கள் ஏந்தி ஆடிப்பாடுகின்றோம் தாயே!**
**ஆயிரக்கணக்கான மக்கள் உம் அற்புதங்களை**
**அநுபவிக்கின்றனர்**
**ஆண்டாண்டு தோறும் எம்மை நீர் ஆளுமம்மா**
**ஆண்டவர் இயேசுவிடம் எமக்காய் வேண்டுமம்மா!**

**அம்மா தாயே! அடியவர்கள் நாம்**
**வாழ்த்துகின்றோம்**
**அன்புடன் அருளினோம் வந்தனைகள்**
**வாழ்த்துக்கள்**
**அனைவரும் வாழ்த்தினோம்**
**‘பிறந்தநாள் வாழ்த்துக்கள்’**
**அம்மா! எங்கள் அம்மா! அன்பான தாயே! வாயார**
**வாழ்த்தினோம் தாயே!**
**விண்ணவர் மண்ணவர் மண்டியிட்டு**
**வாழ்த்துகின்றனர்**
**விசுவாசிகள் யாவரும் விரும்பி வந்து**
**வாழ்த்துகின்றனர்**
**வியப்புடன் வியக்கின்றனர் தாயே உம் விந்தையை**
**விருப்பமுடன் வாழ்த்துகின்றோம் பிறந்தநாள்**
**வாழ்த்துக்கள்**

**வாழ்க வாழ்க தாயே! வந்தனங்கள்**
**வாயாரப் பாடினோம்**
**வாழ்த்தினோம் தாயே! வணங்கினோம் தாயே!**
**வானமும் பூமியும் மகிழ்ந்து பாடுகின்றன வாயாரப்**
**புகழ்கின்றன. வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் பிறந்த**
**நாள் வாழ்த்துக்கள்**

**வானகமே வையகமே பாடுங்கள் மகிழுங்கள்**



**எம் தாய்க்கு பிறந்தநாள்**
**வாழ்த்துக்கள்.**

***"A very happy Birthday our Derest mother"***

**அருட்சகோ. டெலாறோஸ் அ.கா**

2010 - 2020 ஞான ஒளி



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

## ▶▶ பேதுரு ◀◀

### பொதுக்காலத்தின் 22வது ஞாயிறு (01.09.2019)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 22வது ஞாயிறு தின வழிபாட்டில் பங்குகொள்ள வந்திருக்கும் நமக்கு "தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்ற உண்மையைப் படிப்பினையாக இன்றைய வழிபாடு தருகின்றது. நாலுபேர் நம்மை மதிக்கவேண்டும், உயர்வாகப் பேச வேண்டும் என்ற எண்ணம் நமக்குள் எழுவதில் தவறில்லை. ஆனால் நான் மற்றவர்களை விட உயர்வானவன், எனக்குத்தான் எதிலும் முதலிடம் கிடைக்கும் என எண்ணி மற்றவர்களை வாழ்வில் முன்னேற விடாமல் தடைக் கல்லாக நின்று கொண்டு நான் மட்டும் உயர வேண்டும் மற்றவர்கள் என்னைப் புகழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் வாழும்போது தான் மனிதன் தன் நிலையை உணராமல் தவறான பாதைகளில் உயர்வடைய முயலுகிறான். இதனால் தற்பெருமை கொள்கிறான். அழியா வாழ்வை அதாவது நிலைவாழ்வை அடைய நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இன்றைய முதல் வாசகமும் நற்செய்தியும் கற்பிக்கின்றது. அதுதான் தாழ்ச்சி. நீ பெரியவனாய் இருக்கும் அளவுக்குப் பணிந்து நட அப்போது ஆண்டவர் முன்னிலையில் பரிவு கிட்டும். நாமும் நமது நிலை உயருமபோது பணிவு கொண்டு இறையரசை நோக்கிப் பயணம் செய்ய அருள் வேண்டிடத் தொடரும் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் :** சீராக் 3:17-18, 20, 28-29

நீ செய்வது அனைத்தையும் பணிவோடு செய்.

**பதிலுரைப் பாடல் :**

ஒடுக்கப்பட்டோர்க்கு கடவுளே மறுவாழ்வு அளித்தீர்.

**இரண்டாம் வாசகம் :** எபி 12:18-19, 22-24

நீங்கள் வந்து சேர்ந்திருக்கும் சியோன்மலை வாழும் கடவுளின் நகர்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா, அல்லேலூயா! நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள் என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் :** லூக் 14:1,7-14

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா!
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசுவிடம் விளங்கிய தாழ்ச்சி என்னும் நல்ல பண்பை தன் மக்களுக்கும் போதித்து உலகிற்கு உப்பாக விளங்கும் திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவியர், இறைமக்கள் அனைவரும் நம் தலைவரான இயேசுவின் வழிநின்று தாழ்ச்சியான உள்ளத்துடன் என்றும் வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

பிரதிபலன் எதிர்பார்க்காத அன்பில் தான் ஆண்டவன் குடிகொள்கிறார் என்பதைப் புரிந்து கொண்டவர்களாக எமது நாட்டின் ஆட்சியாளர்கள், தலைவர்கள், பொறுப்பாளர்கள் அனைவரும், பேர், புகழ், மதிப்பு, முதலிடம் என்பனவற்றைத் தேடாது, தாழ்ச்சியான உள்ளத்துடன் மக்கள் பணியாற்றிட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

இயேசுவை பின் செல்லும் மக்களாகிய நாமும் நமது புகழுக்காக சேவை செய்வதைவிட மற்றவர்களின் மகிழ்ச்சிக்காக நம்மை இழக்கவும், பெருமை கொள்ளாது மனித மாண்பை மதித்து மனிதனுக்கு முன்னுரிமை கொடுத்து சேவை செய்ய தாழ்ச்சி உள்ளம் கொண்டவர்களாக வாழவும் வரமருள வேண்டுமென்று...

### பொதுக்காலத்தின் 23வது ஞாயிறு (08.09.2019)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 23வது வாரத்தை இறை ஆசீருடன் ஆரம்பிக்க வந்திருக்கும் திருஅவையின் இறைமக்களே! அன்பே ஞானத்திற்கு வழி செய்கிறது. அன்பினால்தான் உலக ஆசைகளை வெறுத்து ஒதுக்க முடியும். இன்றைய நிலையில்லா உலகில் அன்பு எவ்வளவு அவசியம் என்பதையும் ஞானத்தின் பேறுபலன்களை சுவைத்து உணர அன்பு என்ற கனிரசம் இன்றியமையாதது என்பதையும் உணர்த்தும் வார்த்தைகளை வாசகங்களில் பார்க்கின்றோம். நற்செய்தியில் இயேசுவின் சீடராவதற்கு எவ்வாறான தகுதிகள் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. திருத்தூதர்களும் புனிதர்களும் இறைவார்த்தைகளை தமது வாழ்வில் வாழ்வாக்கியவர்கள். இவர்களுக்கெல்லாம் வழிகாட்டியான மரியாவின் பிறந்த நாளை இன்று நாம் நினைவுகூர்கின்றோம். மீட்பின் வரலாற்றின் முக்கிய பங்காளியான மரியாள் இறைவார்த்தைக்கு பணிந்து இறை திட்டத்தை நிறைவேற்ற முழுமனதோடு ஒத்துழைத்தவள். இதனால் மரியாள் இயேசுவின் முதற் சீடத்தியாக மதிக்கப்படுகின்றாள். எனவே நாம் நமது சிலுவைகளை ஏற்றுக்கொண்டு மற்றவரை அன்பு செய்து இயேசுவின் சீடராவோம். இதற்கான அருளுக்காக மன்றாட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் :** சா.ஞா 9:13-18

ஆண்டவரின் திருவுளத்தைக் கண்டு பிடிப்பார் யார்?

**பதிலுரைப் பாடல் :**

என் தலைவரே தலைமுறை தோறும் நீரே எங்கள் புகலிடம்.

**இரண்டாம் வாசகம் :** பிலமோன் 9:10,12-17

இனி அவனை நீர் அடிமையாக அல்ல உம்முடைய அன்பார்ந்த சகோதரனாக ஏற்றுக்கொள்ளும்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா, அல்லேலூயா! உம் ஊழியன் மீது உம் முக ஒளி வீசச் செய்யும். உம் விதி முறைகளை எனக்குக் கற்பித்தருளும் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் :** லூக் 10:25-37

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைமக்களாகிய நாம் அனைவரும் இறை ஞானம் பெற்றவர்களாக நிலைவாழ்வை நோக்கிப் பயணம் செய்ய வழிகாட்டும் திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், அருட்துறவியர் அனைவரையும் ஆசீர்வதித்து அவர்களுக்கு வேண்டிய உடல் உள ஆன்ம நலன்களைத் தந்தருள வேண்டுமென்று...

எமது சமய, சமூக, அரசியல் தலைவர்கள் அனைவரும் மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களாகவும் அமைதி தரும் ஞானத்தோடு சிந்தித்து செயல்படுபவர்களாகவும், நாட்டின் நலனுக்காகவும் மக்களின் முன்னேற்றத்திற்கு உழைப்பவர்களாகவும், தமது சேவை என்னும் சிலுவைகளை வாஞ்சையுடன் சுமப்பவர்களாகவும் வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

மரியன்னையின் பிறப்பு விழாவைக் கொண்டாடும் நாமும் அவளைப் போன்று இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ்ந்து விண்ணக வாழ்வை நமதாக்கிக் கொள்ளவும், தியானம், செபம், ஒறுத்தல் முயற்சிகளின் ஊடாக இறை உறவில் நிலைத்திடவும் இறைஞானத்தை தேடும் மக்களாக வாழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் - 11

## மனம் வருந்துதல்

- நீ ஏதாவது வளர்ச்சி காண விரும்பினால், இறைபயத்தில் உன்னைக் காத்துக்கொள். அளவற்ற உரிமையும் உனக்கு வேண்டுவதன்று. ஆனால் உன் எல்லாப் புலன்களையும் கட்டுப்படுத்து. தகுதியற்ற இன்பத்திற்கு உன்னைக் கையளித்துவிடாதே.
- வருந்தும் மனம், மிகுந்த நன்மைக்கு வழி கோருகின்றது. சிதைந்த மனம் அதை விரைவில் அழித்துவிடுகிறது.
- உலகம் என்ற தனது வேற்று நாட்டில் உறைதலையும் தனது ஆன்மாவின் மிகுந்த இடையூறுகளையும் சிந்தித்துச் சீர்தூக்கும் மனிதன், இவ்வுலகில் எப்போதாவது நிறைந்த இன்பம் துய்க்க முடியுமா என்பது விந்தையாகும்.
- இதயச் சிறுமையாலும் நம் தவறுகளைப் புறக்கணிப்பதாலும் நாம் நமது ஆன்மக் கவலைகளை உணர்வதில்லை. இதனால், உண்மையில் அழவேண்டிய நேரத்தில் பன்முறை பயமின்றிச் சிரிக்கின்றோம்.
- நல்ல மனச்சான்றுடன் கூடிய இறைபயத்தில் அன்றி வேறு எதிலும் உண்மைச் சுதந்திரமும் நல்ல மகிழ்ச்சியும் இல்லை.
- மன அலையினால் வரும் எல்லாத் தடைகளையும் அகற்றி, மீண்டும் தன்னைப் புனித மனம் வருந்துதலின் ஒன்றிப்புக்கு கொண்டுவரத் தெரிந்தவன் மகிழ்ச்சியுடையவன்.
- தனது மனச்சான்றைக் கறைப்படுத்தவல்ல, அல்லது, வருத்தக்கூடிய அனைத்தையும் தன்னிடமிருந்து களைந்து விடுகிறவன் மகிழ்ச்சியுடையவன்.
- ஆண்மையுடன் போர்செய், பழக்கம் பழக்கத்தால் வெல்லப்படும்
- நீ மனிதர்களின் சந்தடியை விட்டுவிட்டால் உன் செயல்களைச் செய்ய அவர்களும் உன்னைத் தனிமையில் விட்டு விடுவார்கள்.
- பிறருடைய செயல்களில் நீ தலையிடாதே. பெரியவர்களின் அலுவல்களிலும் சிக்கிக் கொள்ளாதே.
- என்றும் முதலில் உன்மேல் விழிப்பாயிரு. உன் எல்லா அன்பரைவிடவும் உனக்கே தனி எச்சரிக்கை கொடு.
- மனிதரது ஆதரவு உனக்கில்லையென்றால், அதற்காகக் கவலைப்படாதே. ஆனால், இறைவனின் ஊழியனுக்கும், ஒரு பக்தியுள்ள துறவிக்கும் ஏற்றவண்ணம் நீ விழிப்பாக ஒழுகவில்லையென்றால் அதுவே உனக்குக் கவலை தரும்.
- இந்த உலகில் மனிதன் பல ஆறுதல்கள், குறிப்பாக உடலைச் சார்ந்த ஆறுதல்கள் பெறாதிருப்பது மிகுந்த பயன் தருவதும் பாதுகாப்புடையதும் ஆகும்.
- எனினும், இறைவனின் ஆறுதல்களை நாம் பெறவில்லை என்றால், அல்லது மிக அரிதாகவே அனுபவிக்கின்றோம் என்றால், அதற்கு நாமே குற்றவாளிகள். ஏனெனில், நாம் மனம் வருந்த விரும்புவதுமில்லை. பயனற்ற வெளி ஆறுதல்களை முற்றும் வெறுப்பதுமில்லை.
- நீ இறை ஆறுதல்களுக்கு அருகதையற்றவன் மாறாகப் பெரும் துயருக்குத்தான் அருகதையுடையவன் என்பதை அறிந்து கொள்.
- நல்ல மனிதன் தான் வருந்துவதற்கும், அழுவதற்கும் போதுமான பொருளைக் கண்டடைகின்றான்.
- ஏனெனில், அவன் தன்னைப் பற்றிச் சிந்தித்தாலும், அல்லது, அயலாரைப் பற்றிச் சீர்தூக்கினாலும் இங்கே துன்பமின்றி ஒருவனும் வாழான் என்பதை அறிந்து கொள்கிறான்.
- அவன் எவ்வளவு நுட்பமாகத் தன்னை அலசிப் பார்க்கிறானோ அவ்வளவு மிகுதியாக வருந்துகிறான்.
- நியாயமான வேதனைக்கும், உள்ளம் வருந்துதலுக்கும் பொருளாக அமைவது நம்முடைய பாவங்களும் தீய பழக்கங்களும் ஆகும். இவற்றில் நாம் எவ்வளவு சிக்கிக் கிடக்கிறோம் என்றால், விண்ணக பொருட்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க முடிவதே அரிதாயிருக்கிறத,
- பெரும்பாலும் நல்லெண்ணம் இன்மையால்தான் நமது அவல உடல் இத்தனை எளிதில் முறையிடுகிறது.

தொடரும்

# 10வது அகவையில் பிரகாசிக்கும்
# சாதனைப் பணியில் "ஞான ஒளி"

இன்றைய சந்ததியினரை மட்டுமல்லாது எதிர்கால சந்ததியினரையும் முறையாக வழிநடத்தும் பொறுப்பு ஓர் பத்திரிகைக்கு உண்டு. எந்தவொரு சமூகத்தினையும் மாற்றியமைக்கக் கூடிய சக்தி ஓர் ஊடகத்திற்கு உள்ளது. ஓர் பத்திரிகை "ஊடகம்" எனும் ரீதியில் இதனை மனதிற் கொண்டு கொழும்பு உயர்மறைமாவட்ட இறைமக்களுக்காக மட்டுமல்லாது இலங்கை வாழ் தமிழ் கத்தோலிக்க இறைமக்களின் ஆன்மீக தாகத்தை தணிக்க வற்றாத நீர் ஊற்றாகச் சுரந்து கொண்டிருப்பதை நாம் அறிவோம். கொழும்பு உயர்மறைமாவட்ட கத்தோலிக்க அச்சகத்தின் கடைசிப் பிள்ளையாக "ஞான ஒளி" பத்திரிகை 2010ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5ம் திகதி இம்மறைமாவட்டத் தமிழ்க் கத்தோலிக்கர்களின் நீண்ட நாள் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் இம்மறைமாவட்டத்தில் அவதரித்தது.

இவ் அகவையின் 9வது ஆண்டு நிறைவு வருகின்ற புரட்டாதி மாதம் 5ம் திகதி வியாழக்கிழமை. நினைக்கும் பொழுது சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பொழிவதுபோல் இனிக்கின்றது. எனக்கும் ஞான ஒளிக்கும் உள்ள தொடர்பு தொப்புள் கொடி பந்தம். 9 ஆண்டுகளுக்கு முன் இப்பத்திரிகை வெளிவரத் தொடங்கிய பொழுது எனது ஆக்கங்களை இப்பத்திரிகைக்கு எழுதத் தொடங்கினேன். இன்று வரை எழுதிக் கொண்டே இருக்கின்றேன். எமது ஆக்கங்களால் "ஞான ஒளி" ஒளிவீசியது. அதேவேளை ஞான ஒளியால் நாங்கள் ஒளிரப்பட்டோம். அகவை முதல் ஞான ஒளியை நானறிவேன். அதன் ஒவ்வொரு வருட வளர்ச்சியையும் கண்டு வியர்ந்தவன். எனவே 9வது வருட பூர்த்தியில் அதனைப் பாராட்டாமல் இருக்க முடியாது என்பதனால் இவ் ஆக்கத்தை எழுதுகிறேன்.

வருகின்ற 5ம் திகதி ஞான ஒளி பத்திரிகைக்கு மகத்தானதொரு நாளாகும். எண்ணற்ற பாதைகளில் பயணித்து அவற்றில் உள்ள கற்களையும், முட்களையும் தாண்டி தன்னை மட்டுமல்லாது தன்னோடு அனேக திறமைசாலிகளையும் இணைத்துக் கொண்டு முன்னோக்கி வீறுநடைபோட்டு இன்று 10வது ஆண்டில் தனது கால்தடத்தினைப் பதித்துள்ளது. ஒன்பது ஆண்டு என்பது ஞானஒளியின் சாதனைப் பயணத்தின் வெற்றியுடனான முடிவல்ல ஆரம்பமே! இன்னும் பல்லாயிரம் மைல் தூரம் கடந்து பயணிக்க வேண்டிய பொறுப்பையும், கடமையையும் தன்னுள் கொண்டுள்ளது. அதற்கான கடுமையான உழைப்பையும், அர்ப்பணிப்பையும் செலுத்த வேண்டிய கடப்பாடு ஞானஒளிக்கு உண்டு.

இன்றைய பத்திரிகைத் துறையானது மிக வேகமாக வளர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் அதேவேளை வாசகர்களின் எண்ணிக்கை அருகிக் கொண்டே போகின்றது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக வாசித்து நேரத்தை வீணாக்குவதை விட சமூக வலைத்தளங்களின் ஊடாக தமது ஆன்மீகப் பசியைத் தீர்த்துக் கொள்ள முனைவோர் பெருகி வருகின்றனர். எனவே இன்று ஞானஒளி பாரிய சவாலை எதிர்நோக்கியுள்ளது. எனினும் இவை யாவும் கடந்துபோகும். எமது போக்கையும், அமைப்பையும் காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றியமைத்துப் பயணிக்கும் போது மட்டுமே மாற்றம் ஒன்றே மாறாதது என்பதைப் போல் சில மாறுதல்களும் ஞான ஒளியின் வளர்ச்சிக்கு உரமாகும் என்பதை எண்ணி அதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் நடந்து வந்த பாதைதனைத் திரும்பிப் பார்த்து, சோர்ந்துபோன, துடிப்போடு வீறுநடைபோட்ட சந்தர்ப்பங்களை எண்ணிப் பார்த்து இனிவரும் நாட்களில் வீறுநடை போட, ஒளிவீசிட, ஆசிரியரும், பணியாளர்களும் பயணிக்க வேண்டிய தேவையுள்ளது. வாசகனைக் கவரும் விதத்தில் "ஞான ஒளியின்" அமைப்பு, தரம், கவர்ச்சி, சிறப்பாக அச்சிடப்படும் தாளின் தரம் அமையும் பட்சத்தில் எமக்கென வாசகர்களைக் பெருக்கிக் கொள்ளலாம். இன்று தரமான பொருட்களை நாடியே மக்களும் செல்கின்றனர். எனவே ஞான ஒளி ஒவ்வொரு பங்கிலும் வெறும் பார்வைப் பொருளாக இருக்காமல் ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கும் நிலைக்கு உயர்த்துவது எம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

இவ் ஒன்பது ஆண்டுகளைக் கடந்து 10வது ஆண்டில் காலடி பதிக்கும் இவ்வேளையில் "ஞானஒளியின்" இவ்வுயர்வுக்கு காரணமான ஞானஒளியின் ஆசிரியர், உடன் ஊழியர்கள், அச்சகத்தார் போன்றோரின் கடின உழைப்பும் அர்ப்பணிபுடனான சேவையும், வாசகர்களைக் கவரக்கூடிய விதமாக வெளிப்படுத்தும் பாங்கும் பாராட்டதற்குரியது. எனவே எத்தனை இடர்கள் வந்தாலும் சோர்ந்து போகாமல் தொடருங்கள் உங்கள் பணியினை.

திக்கெட்டும் கொடி கட்டி, திசையெங்கும் புகழ் நாட்டி, இக்கெட்டி நேர்ந்தாலும் இணையாத தீபகற்பமாய் இருக்கின்ற ஞானஒளியின் ஆன்மீக வரலாற்றை புகழ்பாடுவதில் பெருமை கொள்கின்றேன். இறை மக்களின் மேம்பாட்டுக்காய் மானிட விமோசனத்திற்காய், மனித நேய வளர்ச்சிக்காய் உழைத்த ஞான ஒளியை கொழும்பு உயர்மறைமாவட்டத் தமிழ் மக்கள் உயர்த்திப் பார்க்கின்றனர். இதனால் இது இன்னும் பல ஆண்டுகள் கடந்து நிமிர்ந்து நிற்கும் என்பதில் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளேன். இறுதியாக

**உள்ளமதில் வெள்ளமென
எழுந்திட்ட எண்ணங்களை
கருத்தாய்ந்து பகுத்தாய்ந்து
தமிழ் கத்தோலிக்கர்களுக்கு வழங்கி
அன்னை மரி அருள் வேண்டி
இறை இயேசுவின் வாழ்க்கை வழிநின்று
தெளிமிகு சிறப்புடனே கொழும்பு
உயர்மறைமாவட்ட தமிழ் பத்திரிகையாக
வெளிவரும் "ஞான ஒளியே"
துல்லியமாய் செய்திகளைத் தாங்கி வந்து
தனித்துவமாய்த் தமிழ் நெஞ்சங்களில்
தடம்பதித்த, ஒளிவீசிய, உன்னை 10 வருட
அகவையில் வாழ்த்துகின்றேன்.
வாழிய நீ பல்லாண்டு
வாழ்க உன் பணி
வளர்க பல்லாயிரமாண்டு
என்றும் உன் ஒளியில் பங்கெடுக்கும்**

**அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்.**

---

கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

## ஞான ஒளி

GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

கொழும்பு உயர்மறைமாவட்ட தமிழ் மக்களின் நீண்ட கால தேவையை ஈடுசெய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட "ஞான ஒளி" எனும் மழலை தனது 10வது அகவையில் தன் தடம்பதிப்பதில் மகிழ்வடையும் இவ்வேளையில் அம்மழலையை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். நாளும் பொழுதும் பல தடைகளை தாண்டி வளர்ச்சி காணும் குழந்தையைப் போல் "ஞான ஒளி" குழந்தையும் பல தடைகளைத் தாண்டி எதிர் நீச்சல் போட்டு முன்னேறியுள்ளது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. மறைமாவட்ட பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்டாலும். இன்று பல மறைமாவட்டங்களிலும் இக்குழந்தை வலம் வருவதை காணும்போது பெருமையாக இருக்கின்றது. இக்குழந்தையானவள் பல பொக்கிஷங்களை தன்னகத்தே கொண்டுள்ளாள். திரு அவையின் படிப்பினைகள், செய்திகள், காலச் சூழலுக்கு இசைவான கட்டுரைகள், புனிதர் பற்றிய குறிப்புக்கள், ஞாயிறு திருப்பலிக்கு தேவையான சிந்தனைகள், குடும்ப வாழ்வு சிறக்க உளவியல் தொடர், நம்பிக்கை வாழ்வுக்கு உரமூட்டும் கட்டுரைகள், மருத்துவ, சிறுவர் பகுதி என பல அம்சங்களால் தன்னை அலங்கரிக்கின்றாள். பல வரையறைகளுக்கு மத்தியில் வரையறையில்லாமல் இக்குறுகிய காலப்பகுதியில் வளர்ந்துள்ளாள். எனவே மூவொரு இறைவனுக்கு முதல் நன்றி, மற்றும் ஆசிரியர் உட்பட அயராது உழைக்கும் துணை ஆசிரியர்க்கும், பணியாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், வாசகப் பெருமக்களே உங்கள் அனைவர்க்கும் கோடி நன்றி. இக்குழந்தை காத்திரமாக வளர, கூடுதலாக வாங்கி நாம் காத்திரமாக பங்களிப்பு செய்வோம். வாழ்க, வளர்க "ஞான ஒளி".

**அருட்பணி.
அந்திரியாஸ்
பர்னாந்து**

---

## எனது ஞானத்தின் ஞான ஒளியே வாழ்த்துக்கள்....

ஞால ஒளியே - எம்
ஞான ஒளியே
பத்துவயது முடியும்
முன்னே
பதினாறு பக்கங்கள்
உனக்கு

திருஅவை வளர்ச்சி
புகட்டினாய் எனக்கு
பாப்பிறை விரும்பும்
பேராயர் கருத்தும்
ஆண்டவர் வாக்கும்
அவணியில் பெருக

அடித்தளம் நீ - ஆகவே
வளர்க வளமுடன்
இறை அருள்
உன்னுடன்

**எஸ். பிரவீனா, புனித ஜோக்கிம் தமிழ் வித்தியாலயம், இரத்தினபுரி.**

---

## ஒன்பதை நிறைவு செய்து பத்தை ஆரம்பிக்கிற ஆயத்தம் சபாஷ் ஹெப்பி விஷ்சஸ்

என் அன்புச் செல்வமே!
ஒளியே ஞான ஒளியே!
ஐயிரண்டு
ஆண்டுகளுக்கு முன்
குழந்தையாய்
அவதரித்தாய்

இன்று அறிவுடன்
வளர்ந்து
பெரிய சிறுமியாகிவிட்டாய்
அனைத்து
செய்திகளையும் சுமந்து
உலகமே சுற்றித்

திரிகின்றாய் - நீ
நல்ல அதிர்ஷ்ட்டசாலி
அம்மா!
வாழ்த்துக்கள்!

**மேரி இருதயநாதன், பேராலயம் – இரத்தினபுரி**




# நோயாளர் தின நிகழ்வுகள் – தேவத்தை











## "ஞான ஒளியே ஞானத்தின் ஒளியே, ஞாலமெல்லாம் உன் புகழ் ஓங்குக.

## நாநிலமும் ஞாயிறு தோறும் வாராயோ!

ஒளியே ஞான ஒளியே, உன் புகழ் ஓங்குக!
ஒளியே ஞான ஒளியே காலமெல்லாம் உன் ஒளிசுடர் விட்டதே
ஒளியும், வழியும், வாழ்வுமான இறைவன் ஆசை வளர்த்தாயே,
ஒளிர்ந்திடுக உன் ஒளி உயர்ந்திடுக உன் வளர்ச்சி

வளர்ந்தாயே, வாழ்வின் இலட்சியங்களை,
வளர்ந்ததுவே, உன் ஒளியின் மாட்சி,
வல்லவராம் இயேசுவின் வார்த்தைகளை வருவித்தாயே!
வளர்கவே, உன் வளர்ச்சி, வாழ்த்துகிறேன் உன்னை!

நற்செய்தியை நானிலமும் பரப்பி நற்பணி புரிந்த ஒளியே!
நல்லவர்களை வாழ வகுத்த ஞானஒளியே!
நலன் தருகின்ற ஞான ஊற்றான ஞான ஒளியே!
நற்புகழ் ஓங்குக, ஞான ஒளியே! நாள்தோறும் ஓங்குக உன் புகழ்

உலகெல்லாம் உன் புகழ் ஓங்குக. உழைத்திடும் ஒளியே!
உன்னத சேவையை உலகிற்கு அருளி வாழ்வளித்த ஒளியே!
உன் புகழ் ஓங்குக! உன் சேவை உயர்ந்திடுக!
உன் வார்த்தையின் மகிமை வளர்ந்திடுக ஒளியே!

வார்த்தையினால் வாழ்வளித்த ஞானஒளியே!
வார்த்தையில் வடிவெடுத்து வந்த ஒளியே!
வானகமும் வையகமும் உன் சேவையை புகழ்கின்றன!
வாழ்த்துகின்றோம் ஞான ஒளியே வளர்க உன் சேவை!

ஞானஒளியே! நன்மையின் ஒளியே! உன் ஒளி உலகெல்லாம் பரப்பிடுக
ஞானஒளியே! நன்மையின் ஒளியே! உன் நற்புகழ் வளர்கவே!
ஞாலமெல்லாம் நற்செய்தியை நல்ல முறையில் பரப்பிய ஒளியே!
ஞான ஒளியே! வளர்க உன் சேவை! வாழ்க உன் புகழ்!

புதுவாழ்வு புகுத்தி புனிதத்தை புகுத்திய புத்தொளியே!
புத்தொளி பரப்பி, புவியை மாற்றி, புனிதப்படுத்திய ஒளியே!
புகழ் உனக்கே! ஞான ஒளியை! பூமியெல்லாம் உன் புகழ் ஓங்கவே!
புதுப்பொலியும், புதுத்தெம்பும் உன்னகத்தே பூத்துக்குலங்க
உன்னை வாழ்த்துகின்றேன் ஞான ஒளியே!

**அருட்சகோ. டெலாறோஸ். அ.கா**

# ‘இதோ உன் தாய்!’

**இதோ உன் தாய்!**
என இயேசு எனக்கு தந்த அன்பான அம்மா நீரே!
அம்மா என்ற சொல் அழகானது,
அதற்கு விதிவிலக்கு நீதானம்மா,
விடியக்காலத்தின் நட்சத்திரம் நீ தானம்மா!
தம் மகனேயே உலகிற்கு ஒளியாகத் தந்த,
தியாகத்தாய் நீதானம்மா!
உம் மகனைப் போல் எம்மையும் காத்து,
வழிநடத்தி பாதுகாரும் அம்மா!
உம் பிள்ளைகளாகிய எங்களின்
**பிறந்த நாள் வாழ்த்துக்கள்!!!**



**வாழ்க மரியே! வாழ்க!!**




# கானா ஊர் கலியாணம்

(புனித யோவான் 2:-1-10)

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.
மின்னஞ்சல் :cgnanaoli@yahoo.com





இயேசுவும் அவருடைய சீடரும் அத்திரு மணத்திற்கு அழைப்புப் பெற்றிருந் தனர். கலிலேயாவில் உள்ள கானாவில் திருமணம் ஒன்று நடைபெற்றது. ..............................
..............................................................................




திருமண விழாவில் திராட்சை இரசம் தீர்ந்து போகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி, ‘........
..........................
..............................
.......................... ..............................
.......................................... ...............
எனது நேரம் இன்னும் வரவில்லையே’ என்றார்




இயேசுவின் தாய் பணியாளர்களிடம் .................... என்றார்.
யூதர்களின் தூய்மைச் சடங்குகளுக்குத் தேவையான ................................................ ......................... ..... ............................................. அவை ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளும்.





இயேசு அவர்களிடம் ‘...........................................
.............................. .............................என்று கூறினார்.
அவர்கள் அவற்றை விளிம்புவரை நிரப்பினார்கள்.




..............................
............... ..............
................................
............ ...................
என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள்.




பந்தி மேற்பார்வையாளர் திராட்சை இரசமாய் மாறியிருந்த தண்ணீரைச் சுவைத்தார். ......................
............ ............................ .......................
. ............................................. தண்ணீர் மொண்டு வந்த பணியாளருக்கே தெரிந்திருந்தது.




ஆகையால் பந்தி மேற்பார்வையாளர் மணமகனைக் கூப்பிட்டு, ‘..........................................................
............. ........................... ......................
............. ........................................ ...........
............ நீர் நல்ல இரசத்தை இதுவரை பரிமாறாமல் ஏன் வைத்திருந்தீர்’ என்று கேட்டார்.




# விவிலியப் பகுதி



## நற்செய்தி : புனித மாற்கு

### அதிகாரம் – 05

85. உயிர் பெற்ற சிறுமியின் வயது எத்தனை?
86. சிறுமி எழுந்தவுடன் இயேசு என்ன கொடுக்க சொன்னார்?
87. இயேசு எப்போது தொழுகை கூடத்தில் கற்பிக்க தொடங்கினார்?
88. இயேசுவினுடைய சகோதரர்கள் யார் என்று மக்கள் பேசினார்கள்?
89. இறைவாக்கினர் எங்கு மதிப்பு பெறுவர்?
90. இயேசு சொந்த ஊரில் ஒரே ஒரு செயல் மட்டும் செய்தார் அது என்ன?
91. தம் சீடர்களை எத்தனை பேராக அனுப்பினார்?
92. சீடர்களுக்கு எவற்றின் மீது அதிகாரம்அளித்தார்?
93. பயணத்திற்கு எதை கொண்டு போகச் சொன்னார்?
94. பயணத்திற்கு எதை எடுத்துச்செல்ல வேண்டாம் என்றார்?

☛ 15

## புனித யோவான் நற்செய்தி





ஆசிரியர் : புனித யோவான்
அடையாளம் : கழுகு
காலம் : கி.பி 90 - 100
இடம் : எபேசு

மற்ற மூன்று நற்செய்திகளையும் விட யோவான் நற்செய்தி மிக ஆழமான இறையியல் கருத்துக் களைக் கொண்டது.

நற்செய்தியின் அடையாளம்
: வானத்தில் மிக உயரமாக பறக்கும் பறவை கழுகு. ஆதனால் இவ்வடையாளம் வழங்கப்பட்டுள்ளது.

நோக்கம் : இயேசு இறைவனும் மனிதனும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது இயேசு மீது நம்பிக்கை கொண்டோர் நிலை வாழ்வின் அடையாளம்.

புனித யோவான் செபதேயு, சலோமியின் புதல்வர், புனித யாக்கோபின் சகோதரர் இவர்கள் இருவரும் மீன் பிடிதொழில் செய்தார்கள்.

---

கடந்த பத்திரிகையில், உவமையின் பெயர் மாறுதலாக பிரசுரிக்கப்பட்டதற்கு வருந்துகிறோம். மாணவர்கள் சரியான உவமையை வாசித்து எமக்கு அனுப்பியவர்களுக்கு நன்றி. சரியான உவமையின் பெயர் நல்ல சமாரியன் ஆகும்.

**மேலே தரப்பட்டுள்ள உவமையை தெளிவாக வாசித்து பூர்த்தி செய்து செப்டம்பர் மாதம் 09ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அல்லது ஈ-மெயிலுக்கு அனுப்புங்கள்.**
பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களை எழுதும் முதல் 5 மாணவர்களின் விபரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

இப்போட்டியில் பங்கு கொண்ட மாணவர்களுக்கும், சரியான விடையை எழுதி அனுப்பிய மாணவனுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**செல்வன் ஐ. அற்றியன் ஜவன்**
**தரம்: 04 புனித பேதுரு கல்லூரி, பம்பலப்பிட்டி.**

## மாணவர் ஒளி





# உன்னோடு ஒரு நிமிடம்

கலங்காதே நண்பா.
நீ என் அன்புக்குரியவன்!

உலகில் மற்றெல்லா-
வற்றையும் ஒரு சொல்-
லால்தான் படைத்தேன்
உன்னை மட்டும் தான்
வனைந்தெடுத்தேன்.

உனக்குள் மட்டும்தான்
என் உயிர்காற்றை
அனுப்பினேன்.

பண்படுத்தவும், பயன்ப-
டுத்தவும் ஆளவும்,
மாட்சிப் பெறவும்
அதிகாரம் கொடுத்தேன்.
உன்னை அன்பு
செய்ததனால்தான்
எல்லாவற்றையும்
நல்லதெனவும்
அறிவித்தேன்.

நீ ஆடைக்கு ஆசைப்ப-
ட்டபோது நான் அசிங்க-
ப்படுத்த விரும்பவில்லை.

ஏனெனில் நீ என்
அன்புக்கு உரியவன்.

நீ மண்ணைத் தோண்டி-
னாய். நான் கனிகளைக்
கொடுத்தேன்.

நீ தனிமையாய் நின்றாய்
நான் உன்னைப் பலுகிப்
பெருகச் செய்தேன்.

நீ அடிமையாய்ச்
சென்றாய் நானே
உன்னை விடுவித்தேன்

நீ கொலை செய்தாய்,
நான் வாழ்வையே
தந்தேன்

நீ பாவம் செய்தாய்

நான் மண்ணில் பிறந்தேன்

ஏனெனில் நீ என்
அன்புக்கு உரியவன்.

நீ உன்னை அன்பு
செய்யக் கற்றுக்கொள்
நீ உன்னை அன்பு
செய்யவில்லை என்றால்,
பிறர் உன்னை எப்படி
அன்பு செய்வார்கள்?

நீ உன்னைப் பற்றி
நல்ல எண்ணம் கொண்-
டவனாக இல்லை
என்றால், மற்றவர்கள்
எப்படி உன்னைப்பற்றி
நல்ல எண்ணம் உடைய-
வர்களாக இருப்பார்கள்?

நீ உன்னை முழுமையாக
ஏற்றுக்கொள்ளும்
சமயத்தில் மற்றவர்களும்
உன்னை முழுமையாக
ஏற்றுக் கொள்வார்கள்.

இவ்வாறு நீ உன்னை
ஏற்றுக் கொள்ளும்
போது நீ பதவிக்கும்
பட்டத்துக்கும் ஏங்க-
மாட்டாய்! புகழுக்கும்
போற்றுதலுக்கும் அடிமை-
யாகிவிட மாட்டாய்!
பிறர் உன்னைக்
குறை கூறும்போது
அஞ்சமாட்டாய்.

நீ உனது நிறைகுறை-
களைக் கண்டு
கலங்கமாட்டாய்
பிறரை மகிழ்ச்சிப்படுத்த
வேண்டும். பிறர்
சொல்லுகிறபடி நடக்க
வேண்டும். அப்போதுதான்
அவரது அன்பு
கிடைக்கும் என்று
எண்ணமாட்டாய்.

தற்கொலைக்கு
முயன்றதாய் ஒரு
தாவரத்தைப் பற்றி
கேள்விப்பட்டிருக்கிறாயா?

விஷம் தின்று செத்துப்-
போன விலங்கு ஏதேனும்
உண்டா?

ஒற்றை மரமாக
வாழ்வெல்லாம்
நின்றாலும் வாழ்வை
வெறுத்ததாய் வரலாறு
ஏதுமுண்டா?

கறுப்புப் பனையைப்
போல கம்பீரம்
வேண்டுமென்று காற்று
அடிக்கையில் வாழை
கண்கலங்கி நின்றதுண்டா?

நீ அம்மணமாய்
இருந்தபோது உனக்கு
வெட்கத்தைத் தரவில்லை.

# பரிதவிக்காதே நண்பா நீ என் அன்புக்குரியவன்

# முடியும் என்றால் விடியும்!



**“எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்”**

**“விழுந்து கிடந்தால் வெற்றி கிடைப்பதில்லை! எழுந்து நடந்தால் கிடைப்பதுதான் வெற்றி”!**

உலகப் புகழ்பெற்ற சிற்பி மைக்கலேஞ்சலோ, “என் கையில் “உளி” இருக்கும்போது எதுவும் எனக்குத் தேவையில்லை” என கூறுவார். ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் உயர, வளர, நம்பிக்கையைத் தன் கரத்தில் பிடித்துக் கொள்ள வேண்டும்.

வெற்றி பெறும் மனிதர்கள் அனைவரும் எழுந்து நடக்க கற்றுக் கொண்டவர்கள். விழுந்து கிடக்கிறவன் தன் நிழலைக் கண்டே அஞ்சுகிறான்.

வழி தெரியாத அட்லாண்டிக் கடல் வழியே தன் முதல் பயணத்தை மேற்கொண்ட கொலம்பஸ் அவரது குறிப்பேட்டில், “ஒவ்வொரு நாளும் இன்று தான் எங்கள் முதல் பயணம் என எழுதுவார்” ஆண்டுகள் பல பயணம் மேற்கொண்டாலும் நம்பிக்கை தளரவில்லை. கடைசியில் “அமெரிக்கா” என்னும் புதிய நாட்டை கண்டு மகிழ்ந்தார்.

கவிஞர் ஜோகுன் மில்லர் எழுதிய கொலம்பஸ் பற்றிய கருத்துக்கள் மிகவும் பிரபலமானவை. “தைரியமும், விடாமுயற்சியும் உன்னிடம் இருந்தால் நீ உன் இலட்சியத்தை எளிதில் அடைவாய், எனவே, உன் பாதையை தீர்மானி, அதில் தொடர்ந்து செல், இலட்சியத்தை அடைவாய்” என குறிப்பிடுகிறார்.

முடியும் என்கிறவன் மலையைக் கடந்தாலும் மடிந்துப் போக மாட்டான். முடியாது என்பவன் “கடுகில்” கால் வைத்தாலும் கரை சேரமாட்டான். நமது வாழ்வில் நம்பிக்கை நமதாக இருக்க வேண்டும்.

அறிஞர் ஜான் குன்சி ஆடம்ஸ் “தைரியமும், விடாமுயற்சியும் மந்திர தாயத்து போல செயல்பட்டு துன்பங்களையும், தடைகளையும் அழிக்கும்” என கூறுவார்.

தூய பவுல் எபேசியர் 6:16இல், “எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்” என குறிப்பிடுகிறார்.

இயேசு கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்ப்பது நம்பிக்கையைத் தான். உனக்கு நம்பிக்கை இருக்கிறதா, எல்லாம் கூடும் என்றார். நூற்றுவர் தலைவனின் மகன் குணமடைய இயேசுவைப் பார்த்து ஜெபிக்கும்போது, “நீ போகலாம், நீர் நம்பிய வண்ணமே உமக்கு நிகழும் என்றார்” (மத் 8:13)

தன் நோய் நீங்க வேண்டும் என எண்ணி இயேசுவின் ஆடையின் விளிம்பை தொட்ட பெண்ணை “மகளே துணிவோடிரு, உனது நம்பிக்கை, உன்னை குணமாக்கிற்று” என பாராட்டுகிறார் (மத் 9:22)

நம்பிக்கை மலையளவு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அது “கடுகளவு” இருந்தாலும் முழுமையானதாக இருக்க வேண்டும், என இயேசு விரும்புகிறார். “கடுகளவு நம்பிக்கை உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்தக் காட்டு அத்திமரத்தை நோக்கி, நீ வேரோடே பெயர்ந்து போய் கடலில் வேரூன்றி நில்! எனக் கூறினால் அது உங்களுக்கு கீழ்ப்படியும்” என லூக்கா 17:6இல் குறிப்பிடுகின்றார்.

இன்று மனிதர்கள் நம்பிக்கையை இழப்பதால்தான் வாழ்வில் வெறுமையையும் தோல்வியையும் கண்டு அஞ்சுகின்றனர். விரக்தியில் உன்னத வாழ்வின் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். இறைவன் நாம் வாழ கொடுத்த உயர்ந்த கொடை நம்பிக்கைதான். அது நமக்குள் முழுமையாக இருக்க வேண்டும்.

விழுகிறவன் மண்ணைப் பார்க்கிறான், எழுகிறவன் விண்ணை மட்டுமே காண்கிறான். விழுவது இயற்கைதான். காலை வெயிலில் உங்கள் நிழல் முன் பக்கமாக விழுந்தால், மாலை வெயில் பின்பக்கமாகத்தான் விழும். எனவே நிழலைப் பார்த்தால் தடுமாறுவோம். வழிமாறுவோம். மாறாக விண்ணைப் பார்த்தால், உலகம் உன்னை பார்க்கும்.

கோடையில் குளம் வற்றி விட்டதே என்று கொக்கு வருத்தப்படாது, மீண்டும் மழைக்காலம் வரும்!

மழைக்காலம் வந்துவிட்டதே என நதி குதிக்கக் கூடாது, மீண்டும் வெயில் காலம் வரும்!

**வருவதும், போவதும் வாழ்வதற்காக, வீழ்வதும், எழுவதும் மீள்வதற்காக!**

முடியும் என்கிறவனுக்கு எல்லாம் விடியும்.

- முயற்சியால் உயர்ந்த காரியங்கள் சாதிக்கப்படுகின்றன.

**– சாமுவேல் ஜான்சன்**

- முயற்சி திருவினையாக்கும், முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.

**– குறள் 616**

- நேர்மையுடையவர் தம் நம்பிக்கையினால் வாழ்வடைவர்

**– அபக்கூக்கு 2:4**

**நம்மால் முடியாது என்று நினைக்கும் செயல்களை, யாரோ ஒருவர் எங்கோ ஓர் இடத்தில் அதை செய்து கொண்டுதான் இருக்கிறார்.**

**எது உன்னை அச்சம் கொள்ளச் செய்கிறதோ அதை அஞ்சாமல் எதிர்த்து நில்**

**வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்கு... தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு**

## 54 ஆண்டுகள் சேவைக்குப் பரிசு, வெளியேற்றம்



பழங்குடியினரிடையே சேவையாற்றிய இஸ்பானிய அருள்சகோதரியை 10 நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டது இந்திய அரசு

புனித வின்சென்ட் தெ பவுலின் வாழ்வு முறைகளைப் பின்பற்றும் பிறரன்பின் புதல்வியர் சபையைச் சேர்ந்த 86 வயது நிரம்பிய அருள் சகோதரி Enedina அவர்கள், 1959ம் ஆண்டு மருத்துவப் படிப்பை இஸ்பெயினில் முடித்து, 1965ம் ஆண்டு இந்தியா வந்து, பழங்குடியினர் மற்றும் தலித் மக்களிடையே சேவையாற்றத் தொடக்கினார்.

கடந்த 54 ஆண்டுகளாக ஏழை மக்களிடையில் மருத்துவப்பணிகளையும் கல்விப்பணிகளையும் ஆற்றிவந்த அருள் சகோதரி Enedina அவர்கள், ஒவ்வொரு முறையும் தன் தங்கும் அனுமதியை தவறாமல் புதுப்பித்து வந்தாலும், இந்திய அரசு இவ்வாண்டில் எவ்வித காரணமும் கூறாமல், புதுப்பிக்க மறுத்ததுடன், 10 நாட்களுக்குள் வெளியேறுமாறு உத்தரவிட்டதைத் தொடர்ந்து, நாட்டை விட்டு வெளியேறி இஸ்பெயினுக்குப் பயணமானார்.

வட இந்தியாவின் Berhampur பகுதியில் சேவையாற்றிவந்த அருள் சகோதரி Enedina அவர்கள், நாட்டைவிட்டு வெளியேற கட்டளை இடப்பட்டது மிகவும் வருத்தம் தரும் செய்தியாக உள்ளது என்ற கவலையை வெளியிட்ட Berhampur Mau; Sarat Chandra Nayak அவர்கள், மருத்துவக் கல்வி பயின்ற அருள் சகோதரிகள், தங்கள் பகுதியில் இல்லாத நிலையில், இந்த சகோதரி வெளியேற்றப்பட்டுள்ளது, பூர்வீகக்குடியினருக்கும் தலித் மக்களுக்கும் பெரிய இழப்பாக உள்ளது என்றார்.

அருள்சகோதரி Enedina அவர்கள் சார்ந்திருக்கும் பிறரன்பின் புதல்வியர் துறவு சபை, 1633ம் ஆண்டு பிரான்சில் தொடக்கப்பட்டு, 16,179 அங்கத்தினர்களுடன் 90 நாடுகளில் பணியாற்றி வருகிறது. 1940ம் ஆண்டு இந்தியாவில் சேவையாற்ற வந்த இத்துறவு சபை, 14 மறைமாவட்டங்களில் 42 இல்லங்களைக் கொண்டு சேவையாற்றி வருகிறது.

## அமேசான் மழைக்காடுகளின் துன்பம், உலகின் துன்பம்

உலகின் நுரையீரல்களைக் காப்பாற்றுமாறு, அமேசான் பகுதி நாடுகளுக்கும், ஐ.நா. நிறுவனத்திற்கும், உலக சமுதாயத்திற்கும், இலத்தீன் அமெரிக்க மற்றும், கரீபியன் ஆயர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்

உலகிலுள்ள காடுகளில் தீப்பற்றி எரிவது, அதனால் காடுகள் அழிக்கப்படுவது குறித்து, இலத்தீன் அமெரிக்க மற்றும், கரீபியன் ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பு (CELAM) ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

அலாஸ்கா, சைபீரியா, கிரீன்லாந்து, கானரித் தீவுகள், குறிப்பாக, அமேசான் பருவமழைக்காடுகளில் தீ பற்றியெரிவது, மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றுரைக்கும், அக்கூட்டமைப்பின் அறிக்கை, அமேசான் மழைக்காடுகள் தீப்பிடித்து எரிவது, மிகப்பெரும் அளவில், இயற்கைப் பேரிடராக உள்ளது என்று கூறியுள்ளது.

அமேசான் மழைக்காடுகளில் வாழ்கின்ற பழங்குடியின மக்களுடன் தங்களின் நெருங்கிய ஒருமைப்பாட்டைத் தெரிவித்துள்ள, இலத்தீன் அமெரிக்க மற்றும், கரீபியன் ஆயர்கள், இப்பெருந்துயரை அகற்றுவதற்கு, உலக சமுதாயத்தின் ஒருமைப்பாட்டுக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். உலகின் நுரையீரல்களாகிய பருவமழைக் காடுகள் காப்பாற்றப்படுமாறு உலகினருக்கு அழைப்பு விடுத்துள்ளதுடன்

**அமேசான் மழைக்காடுகள் துன்புற்றால், உலகமும் துன்புறும் என்றும் எச்சரித்துள்ளனர்**

வருகிற அக்டோபரில், வத்திக்கானில் அமேசான் குறித்து, நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் சிறப்பு மாமன்றத்திற்கென தயாரிக்கப்பட்டுள்ள ஏட்டில், வளம் நிறைந்த பல்லுயிர்களைக் கொண்டிருக்கும் அமேசான் மழைக்காடுகள், இப்பூமிக்கோளத்திற்கு மிக முக்கியமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளதை, ஆயர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உலகின் மிகப்பெரிய அமேசான் பருவமழைக்காடுகள், கடந்த இரு வாரங்களாக தீப் பிடித்து எரிந்துகொண்டிருக்கின்றன.

## மருத்துவமனை கப்பல்




மருத்துவமனை கப்பல், அமேசானில் ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீட்டர் சுற்றளவு பகுதிகளில், உதவி அதிகம் தேவைப்படும் மக்களுக்கு, மருத்துவ சேவைகளை வழங்குவதுடன், இறைவார்த்தையையும் அறிவிக்கும் அமேசான் பகுதி மக்களுக்கு நல்வாழ்வுப் பணிகளையும், இறைவார்த்தையையும் எடுத்துச் செல்லும் திருத்தந்தை பிரான்சிஸ் மருத்துவமனை கப்பல் உயர்மறை மாவட்டத்தை வந்து சேர்ந்துள்ளது. ஆறுகள் வழியாக மட்டுமே உதவிகள் பெறக் கூடிய அமேசான் பகுதிகளில், தனது பணியைத் தொடங்கியுள்ளது.

இந்தக் கப்பல் வெள்ளோட்டம் பார்க்கப்பட்ட நிகழ்வில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மடலும் வாசிக்கப்பட்டது.

இறைவனுக்கு நன்றிகூறி எல்லாருடனும் தானும் இணைவதாக, அதில் குறிப்பிட்டுள்ளார்,

**இறையாட்சியை அறிவித்து, நோயாளிகளைக் குணப்படுத்துங்கள் என்ற நம் ஆண்டவரின் கட்டளைக்குப் பதிலளிப்பதாகவும் உள்ளது** என்றும் கூறியுள்ளார்.

இந்த முயற்சிக்கு முக்கிய காரணியாக உள்ள பிரேசில் நாட்டு Óbidos Mau; Bernardo Bahlmann அவர்களுக்கும், இறைபராமரிப்பு பிரான்சிஸ்கன் சபையினருக்கும், தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்,







உலகில் எல்லாவிதமான அடிமைமுறைகள் ஒழிக்கப்படுமாறு வேண்டுவோம்.

தாங்களும் மனிதர்களாக அங்கீகரிக்கப்படும் ஆவலில், நம் கதவுகளைத் தட்டும் ஏழைகளின் தேவைகளுக்கு நம் இதயங்களைத் திறப்போம்

ஏழைகள், பாதுகாப்பற்றவர்கள், தன்னை ஒரு மனிதராக ஏற்குமாறு, நம் கதவைத் தட்டுவோர் போன்ற எல்லாரின் தேவைகளுக்கு, ஆண்டவர் நம் இதயங்களைத் திறப்பாராக"


புதிதாகக் கட்டியெழுப்புவதைவிட, ஏற்கனவே கட்டப்பட்டிருப்பதை பழுதுபார்ப்பதற்கும், புதிதாக ஆரம்பிப்பதைவிட, ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கும், சகித்துக்கொண்டே செல்வதைவிட ஒப்புரவாகுவதற்கும் அதிக சக்தி தேவைப்படுகின்றது. இந்த சக்தியையே கடவுள் நமக்கு அருளுகிறார்"

புண்பட்டு சோர்ந்து, அந்த நினைவுகளில் உழலும் இதயங்களில் நம்பிக்கையை ஊட்டி, அதில் கிடைத்த அனுபவத்தால், அதேநிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் இதயங்களைத் தேற்றுவதற்கு உதவுகிறவர் இறைவன்

"உள்ளும் புறமும், நிச்சயமற்ற ஒரு நிலையை நாம் உணர்கையில், நான் உன்னை நினைத்துக்கொண்டிருக்கிறேன் என்ற ஓர் உறுதியை, ஆண்டவர் நமக்கு வழங்குகிறார்"

இன்னல்களை எதிர்கொள்ளும் நம் சகோதரர், சகோதரிகளை நாடிச்சென்று, அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுகின்ற, துணிச்சல்மிக்க பெண்களை இன்று நினைவுகூர்கிறோம், அவர்கள் ஒவ்வொருவரும், கடவுளின் அருகாமை மற்றும், அவரின் பரிவன்பின் அடையாளமாக உள்ளார்கள்"

"நம்மை நினைத்துக்கொண்டிருக்கின்ற, காயமடைந்த நினைவுகளை, நம்பிக்கை எனும் எண்ணெய் தடவி குணப்படுத்துகின்ற, மனச்சோர்வுகளிலிருந்து விடுபட உதவுகின்ற இறைவன், நன்மைகள் புரியவும், துன்புறும் இதயங்களுக்கு ஆறுதலளிக்கவும் நமக்கு உதவுவாராக"



**இறையன்பின் தீ, பிறரன்பில் பற்றியெரிகிறது**

தங்களின் ஓய்வு நேரங்களை, நோயாளிகள், ஏழைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் மத்தியில் செலவழிப்பதற்கு பல இளையோர் முன் வருகின்றனர்.

**மற்றவர் மீது அக்கறையின்மையை அகற்றி, அவர்களின் தேவைகளுக்கு நம் இதயங்களைத் திறப்பதற்காகவே, இயேசு, இம்மண்ணுலகில் கடவுள் அன்பின் தீயைக் கொணர்ந்தார்**

வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில், கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு மூவேளை செப உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், **நற்செய்தியின் ஒளியில், உறுதியான தீர்மானம் எடுப்பதற்கு நேரம் வந்துள்ளது** என, இயேசு தம் சீடர்களுக்குக் கூறும், சிந்தனைகளை வழங்கினார்.

மண்ணுலகில் தீ மூட்ட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம் என்று, இயேசு தம் சீடர்களிடம் கூறிய இந்நற்செய்திப் பகுதியில், அவர் குறிப்பிட்டுள்ள தீ உருவகத்தைப் போன்று, வாழ்வு பற்றி நாம் எடுக்கும் தீர்மானம் தள்ளிப்போடப்படக் கூடாது என திருத்தந்தை கூறினார்.

கடவுள் அன்பின் தீயை வரவேற்பதற்கு, சோம்பல், அக்கறையின்மை, புறக்கணிப்பு, தனக்குள்ளே முடங்கிப்போதல் போன்ற எண்ணங்களைக் கைவிட வேண்டும் என்றுரைத்த திருத்தந்தை, நற்செய்திக்கு கிறிஸ்தவர்கள் எவ்வாறு சான்று பகர வேண்டுமென்பதையும் விளக்கினார்.

நற்செய்திக்கு சான்று பகர்தல் என்பது, நன்மையை நல்கும் தீ போன்றது என்றும், தனிமனிதர்கள், இனங்கள், மக்கள், மற்றும், நாடுகள் மத்தியில் ஏற்படும் அனைத்துப் பிரிவினைகளையும் விலக்கி வாழ்வதாகும் என்றும் கூறியத் திருத்தந்தை, கடவுள் அன்பின் தீ, எதிலும் தனித்துநின்று வாழ்வதை எரித்து, அனைவருக்கும் பிறரன்புப் பணியாற்ற நம் இதயங்களைத் திறக்க வைக்கும் என்றும் தெரிவித்தார்.

# தீராத பிணி போக்கும் புனித செபஸ்தியாருக்கு அரப்பாலாக்கந்தையில் புதிய ஆலயம்

புதிய ஆலயம்



கொழும்பு உயர்மறைமாவட்டத்தினை சேர்ந்த, களுகங்கை கடலோடு சங்கமிக்கும் களுத்துரை மாவட்டத்தின் கீழ்திசையில், சுமார் 15 Km தொலைவில் இயற்கை வளம் மிகக்கொண்டு விரிவாக்கம் பெற்றுவரும் பிரதான பெருந்தோட்டங்களில் ஒன்றாகவும், நான்கு பக்கமும் அழகிய மலைகளால் சூழப்பெற்று எழில் மிகுந்து விளங்கும் கிராமமாகும் அரப்பாலாக்கந்தை.

ஆங்கே! புதிதாய் குடிக்கொண்டு மண்ணிலிருந்து விண்ணை நோக்கியவாறு எழுந்தருளிருக்கும் அரங்காவளரும், பார்க்கும் அடியவருக்கும் இறை நம்பிக்கையை ஏற்படுத்தி, நாடிவருவோருக்கெல்லாம் வேண்டும் அருளை இறைவனிடமிருந்து பெற்றுத்தரும், இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியாய் (இறந்தவரில் ஒருவரான) விளங்கிய எங்கள் வீரப்பெருமகன் புனித செபஸ்தியாரின் ஆலயமானது மத்துகம புனித மரியாள் ஆலய பங்கிற்கு சொந்தமான ஒரு சிற்றாலயமாக அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

## வரலாறு:

கி.பி 18ம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்து அரப்பலாகந்த கிராமத்தில் தமிழ் கத்தோலிக்க மக்கள் வாழ்ந்து வந்ததாக நம்பப்படுகின்றது. இக்கிராமத்தில் இறப்பர் உற்பத்தியானது இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து பிரதான உற்பத்திச் செய்கையாகவும் இக்கிராம மக்களின் பிரதான தொழிலாகவும் இருந்து வந்துள்ளது. அக்காலத்திலிருந்தே புனித வனத்து சின்னப்பர் வழிப்பாட்டு முறையானது இம்மக்கள் மத்தியில் தோற்றம் பெற்றதாகவும், பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து புனித வனத்து சின்னப்பருக்கு செபவழிப்பாடுகள், திருவிழா இடம்பெற்று வந்துள்ளதாகவும் இன்றுவரை சான்றுகள் காணப்படுகின்றன.

1958ம் ஆண்டு காலப்பகுதிகளில் 18 கத்தோலிக்க குடும்பங்கள் விசுவாசத்தில் வேரூன்றி வாழ்ந்துள்ளதாகவும் அதனையடுத்து பின் தொடர்ந்து வந்த காலங்களில் 5 கத்தோலிக்க குடும்பங்கள் இந்தியாவுக்கு சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

1964ம் ஆண்டுகளில் நேபட புனித அந்தோனியார் ஆலயம், கெத்தென்ன புனித அன்னம்மாள் ஆலயம் ஆகியவற்றிற்கு ஒரு திருப்பலி வீதம் இரண்டு திருப்பலி மாதம் ஒருமுறை இம்மக்களுக்காக ஒப்புக்கொடுக்கப்படுவது வழக்கமாயிருந்தது. இந்த திருப்பலியை நிறைவேற்றுவதற்கான தினத்தையும், நேரத்தையும் மக்களுக்கு அறிவிக்க மத்துகம புனித மரியாள் ஆலயத்திலிருந்து கோயில் பிள்ளை ஒருவர் ஒவ்வொரு மாதமும் இக்கிராமத்திற்கு வருகை தருவது வழக்கமாய் இருந்தது. அவர் அப்பொழுது இருந்த 13 கத்தோலிக்க குடும்பங்களுக்கு ரூபா 2/- ஐ மாத சந்தாவாக அரவிடுவார். அக்கால கட்டங்களில் இவ்விரு ஆலயத்திலும் நிகழும் திருவிழா, திருப்பலிகளில் பங்கேற்பதுடன் ஆலய பணிகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி வந்துள்ளார்கள்.

அக்காலக்கட்டத்தில் இக்கிராமத்தில் வாழ்ந்த தோட்ட துரைமார்கள் இவ்விரண்டு ஆலயங்களுக்கும் பொருளாலும், நிதியாலும் தங்களது காணிக்கைகளை செலுத்தி வந்துள்ளார்கள். 1980ம் ஆண்டுகளில் இக்கிராமத்தின் வரலாற்றிலேயே முதன்முதலாக, அப்பொழுது மத்துகம பங்கில் இறைப்பணி ஆற்றிய மன்னாரை பிறப்பிடமாகக் கொண்ட வணக்கத்திற்குரிய அருட் தந்தை சுவாமிநாதன் அடிகளார், அவர்களால் இக்கிராமத்தின் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் மாதம் ஒருமுறை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

1990 காலப்பகுதியில் அரப்பலாகந்த கிராமத்திற்கு அமரர் திரு. செம்சன் என்பவர் அறிமுகமாகி இம்மக்களோடு சில காலம் வாழ்ந்து கத்தோலிக்கர் பற்றிய விளக்கங்களை மக்கள் மத்தியில் தெளிவுப்படுத்தி அவர்களை ஆன்மீக பாதையில் வழிநடத்தி சென்றமை, செபமாலை பக்தி முயற்சிகளை மேற்கொண்டமை, இறைப்பணியில் தம்மை முழுமையாக ஈடுப்படுத்தி தமது பங்களிப்பை செய்துள்ளார்.

இவருடைய வழிக்காட்டல் மூலம் இங்கு அப்போது இருந்த சிறுவர் சிறுமியர் இளைஞர் யுவதிகள் மற்றும் பெரியோர்கள் ஆகியோருக்கு திருப்பலி கீதங்கள்,அன்னை மரியாளின் பக்திசெப முயற்சிகள் என்பவற்றை கற்றுக்கொடுத்து வந்தார். இதன் வளர்ச்சியினை கண்ட பங்குத்தந்தை அவர்கள் ஒரு மே மாதத்தின் ஆரம்ப நாட்களில் அன்னை மரியாளின் திருச் சுரூபத்தை இம்மக்களுடைய அனைத்து வீடுகளுக்கும் எடுத்து சென்று செபமாலை செபிக்குமாறு இவரிடம் கூற, இவரும் வீடுகள் தோறும் செப வழிப்பாடுகளை மேற்கொண்டு சில மாற்றங்களை அம்மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளார் என்பது வரவேற்கத்தக்கதாகும். அருட்தந்தை பிலேஸ் குரே பங்குத்தந்தையாக இருந்தகாலத்தில் அர்ப்பலகந்த கத்தோலிக்க மக்கள் அன்னை மரியாளின் பெயரில் வழிப்பாட்டிற்கான ஒரு இடத்தை அமைக்க ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டனர். இதன் பிரதிபலனாக **குருசடி** ஒன்றினை அமைக்கும் முகமாக இலங்கையின் பெருந்தோட்ட துறையினருக்கு அதாவது கொட்டகல பிலான்டேசன் எனும் தனியார் வர்த்தக நிறுவனத்திற்கு குத்தகையின்அடிப்படையில் சொந்தமானதாக காணப்பட்ட புனித செபஸ்தியார் ஆலயம் அமைக்கப்பட்டுள்ள இவ்விடமானது அப்போது இருந்த கத்தோலிக்க இளைஞர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991ம் ஆண்டு அன்னை மரியாளின் பெயரில் ஒரு சிறு ஆலயம் அமைக்க, அவ்வேளையில் அரப்பலாகந்தையில் இருந்த தோட்ட அதிபர் மாக்கவிட்டகே ஜஸ்டின் அந்தனி பெரேரா (டோனி பெரேரா) என்பவரிடம் கோரிக்கை ஒன்றை விடுத்தனர். அவரும் ஒரு கத்தோலிக்கர் என்பதால் பூரண ஒத்துழைப்புடன் ஆலய அமைவிடத்தை இம்மக்களுக்கு பெற்று தந்துள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பத்திலே மகிழ்ச்சியில் பூத்திருந்த கிறிஸ்தவ மக்கள் தமது காணிக்கைகளாக ஒன்று சேர்த்து வைத்திருந்த ரூபா 85/-யை மூலதனமாக கொண்டு இவ்விடத்திலே ஒரு சிறிய **குருசடி** ஒன்றினை அமைத்து அத்திவாரம் இட்டனர். அதன்பின் அன்னையின் திருச்சுரூபத்தை இறை பக்தியுடன் செபமாலை செபித்து மே 31ம் நாளன்று அங்கு வைத்தனர். பின் இச்சிறிய திருச்சுரூபம் சிதையுற மீண்டும் 3 அடி உயரத்தை உடைய அன்னை மரியாளின் திருச்சுரூபத்தை, இக்கிராமத்தில் வாழ்ந்த இந்து குடும்பமொன்றின் நேர்த்தியின் பெயரில் கொடுக்கப்பட்டு, கத்தோலிக்க மக்களின் ஒத்துழைப்புடன் ஒரு சிறிய அத்திவாரம் மீண்டும் இடப்பட்டு அன்னையின் சுரூபம் பங்குதந்தை அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு வைக்கப்பட்டது. அன்றைய தினம் வழிப்பாடு, நிகழ்ச்சிகள் கோலாகளமாக இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான இம் மக்களின் ஆன்மீக வளர்ச்சிகளை கண்டு வந்த அடுத்துவரும் ஒவ்வொரு அருட்தந்தையரும் திருப்பலியை ஒப்புக்கொடுக்க ஆரம்பித்தனர். இச்சந்தர்ப்பதில் கத்தோலிக்க குடும்பங்கள் எண்ணிக்கையில் சிறிது சிறிதாக அதிகரித்து கொண்டே வந்துள்ளது. மக்களும் தொடர்ந்து இவ்விடத்தில் செபமாலை செபித்து வந்துள்ளார். அத்துடன் இவ்விடத்திற்கு **மாதா சுரூபம்** எனவும் பெயர் சூட்டி அழைத்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அதைத்தொடர்ந்து அருட்தந்தை ஶ்ரீலால் பொன்சேகா அடிகளார் மத்துகம பங்கை பொறுப்பேற்ற காலத்தில் எமது தோட்டத்தை பல தடவைகள் தரிசித்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும். கத்தோலிக்க விசுவாசம் வளர்ச்சிக் கண்ட வேளையில் கிட்டத்தட்ட 38 கத்தோலிக்க குடும்பங்கள் எமது தோட்டத்தில் காணப்பட்டனர். இருப்பினும், அடிப்படை கிறிஸ்தவ குழுக்கள் பல்வேறு தலைப்புகளின் கீழ் அடிக்கடி எமது தோட்டத்தை வலம் வந்து கிட்டத்தட்ட 10ற்கும் மேற்பட்ட கத்தோலிக்க குடும்பங்கள் எம்மை விட்டு பிரிந்து வேறு சபைகளுக்கு சென்றது கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறாக காலம் கழிந்து செல்கையில் ஒவ்வொரு காலத்திலும் பங்கை பொறுப்பெற்ற அருட்தந்தையர்கள் தமது விசுவாசத்தை கட்டியெழுப்புவதற்காக பல முயற்சிகளில் ஈடுபட்டனர். மூன்று மாதத்திற்கு ஒரு தடவையாவது எமது தோட்டத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் வழக்கம் உருவானது.

அருட்தந்தை சுகத் அப்புஹாமி, அருட்தந்தை றொனி, அருட்தந்தை மனோகுமாரன், அருட்தந்தை ஆனந்தன் பர்னாந்து புள்ளே ஆகியோரையும் நன்றியோடு நினைவு கூறுகின்றோம். இன்னும் விசேடமாக அருட்தந்தை டெவுஷான் அடிகளார், பல சந்தர்ப்பங்களில் எம்மை தரிசித்து, எமக்கு பல வழிகளில் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தது சிறப்பம்சமாகும்.

காலம் செல்லச் செல்ல இத்தமிழ் மக்களின் ஆன்மீக வாழ்வின் அவசியம் பற்றியும் இம்மக்களின் நிலைமையை பற்றியும் மத்துகம பங்கிலிருந்து சென்ற அனைத்து அருட்தந்தையர்களும் ஆயர் இல்லத்திற்கு தெரிவித்தனர்.

இதன் அடிப்படையில் தோட்ட மக்களின் இறைத்தாகத்தை தணிப்பதற்காக எமது உயர்மறைமாவட்ட ஆயரினால் தோட்ட மக்களுக்கான ஆன்மீக பணிகளை மேற்கொள்ள அருட்தந்தை, கலன பீரிஸ் அடிகளார் நியமிக்கப்பட்டார். அவர் ஈற்றிலே எமது பங்குத்தந்தையாகவும் நியமிக்கப்பட்டார். இவருடைய காலத்திலேயே அருட்தந்தை ஆனந்தன் பர்னாந்து புள்ளே பங்குத்தந்தையாக இருந்த காலத்தில் பங்கிலே

பழைய ஆலயம்



மாதத்தில் ஒருமுறை என ஆரம்பிக்கப்பட்ட ஞாயிறு தமிழ்த் திருப்பலி மூன்று வாரங்களாக அதிகரிக்கப்பட்டது. இந்நகர்வானது தோட்ட மக்களை இறைவன்பால் ஈர்ப்பதற்கு காரணமாக இருந்தது. இந்நகர்வானது பேராயரின் அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்டதோடு தோட்டங்களில் சிற்றாலயங்கள் அமைக்கவும் கர்தினால் அவர்களினால் ஆலோசனை முன்வைக்கப்பட்டது. பங்குத்தந்தையின் வழிக்காட்டலில் அருட்தந்தை தேவசீலன் (cmf) அடிகளாரின் தலைமையில், எமது தோட்டத்தில் ஏற்கனவே கொடுக்கப்பட காணியில் சிற்றாலயம் அமைக்க கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதோடு அவ்விடத்தில் புனித செபஸ்தியாருக்கு ஆலயம் கட்டுவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இக்காலப்பகுதியிலேயே தோட்ட மக்களின் ஆன்மீக பணிக்காக அருட்தந்தை கலன பீரீஸ் அடிகளாருக்கு உதவியாக, அருட்தந்தை ஒனாசீஸ் அடிகளார் பேராயரால் நியமிக்கப்பட்டார்.

2016ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ம் திகதி ஏற்கனவே குடிசைப்போன்று அமைக்கப்பட்டிருந்த சிற்றாலயம் புனரமைக்கப்பட்டு, புனித செபஸ்டியார் திருச்சுரூபமானது. அருட்தந்தை தேவசீலன் அடிகளாரால் ஆசீர்வதிக்கப்பட்டு வைக்கப்பட்டது.

2016ம் ஆண்டு மார்கழி மாதம் 12ம் திகதி புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்பணி. கலன பீரிஸ் அடிகளாரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. அடிக்கல் நாட்டிய காலந்தொட்டு பேராயரின் வழிக்காட்டலுக்கு அமைவாக எமது தோட்டத்தில் அடிக்கடி திருப்பலிகள், குடும்ப ஒன்று கூடல்கள் நிகழ்ச்சிகள், தவக்கால நிகழ்ச்சிகள், நத்தார் நிகழ்ச்சிகள், இன்னும் பல ஆன்மீக நிகழ்வுகள் நடைப்பெறுவது சிறப்பம்சமாகும். இக்காலத்தில் கிளர்சியன் சபை அருட்தந்தையர் அருட்சகோதரர்கள் பல நிகழ்வுகளை ஒழுங்கு செய்தது குறிப்பிடத்தக்கது. இவ்வாலயமானது அருட்தந்தையர்களின் வழிக்காட்டல்களின் கீழும் எம் தோட்ட மக்களின் அயராத முயற்சியினாலும் பல நல்லுள்ளங்களின் உதவிகளினாலும் பிற சமயத்தவர்களின் உதவியோடும் சுமார் 3 வருட காலப்பகுதிக்குள் ஆலயமானது முழுமையான தோற்றத்துடன் காட்சியளித்தமை சிறப்பம்சமாகும்.

ஆலயத்தின் இறுதி கட்டுமானப் பணிகள் தற்கோதைய பங்குத்தந்தை அருட்தந்தை உதயதாஸ் அடிகளாரின் தலைமையில் மேற்கொள்ளப்படுவதோடு இவ்வருடம் செப்டம்பர் மாதம் 22ம் திகதி இவ்வாலயமானது கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதி. மேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களால் அர்ச்சிக்கப்பட்டு திறந்து வைக்கப்படும்.

இவ்வாலயத்தில் 2017ம் ஆண்டு தொடக்கம் தை மாதத்தில் திருவிழாவானது கொடியேற்றம், நவநாள் மாலை ஆராதனை, திருநாள் திருப்பலி, மற்றும் திருச்சுரூப பவனியோடு இடம்பறுெவது சிறப்பம்சமாகும். இவ்வாலயத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் புனித செபஸ்டியாருக்கு நவநாளும் பிரார்த்தனையும் வாரத்திற்கு இருமுறை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதோடு, மரியாயின் சேனை, திருப்பாலத்துவ சபை இயக்கங்களும் நடைப்பெறவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். எமது விசுவாச வளர்ச்சியில் டொமினிக்கன் சபை அருட் சகோதரிகளின் அர்ப்பணிப்பும் இங்கு குறிப்படத்தக்க அம்சமாகும்.

ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஒவ்வொரு சிறப்பம்சம் உண்டு. அவ்வகையில் ஆண்டவரை கவர்ந்திழுக்கும் புனித செபஸ்டியார் கலங்குண்ட மனங்களின் கண்ணீரை துடைத்து நோய்களை குணமாக்கி, கவலைகளைத் தீர்க்கும் காவல் தூதனாக, எமது தோட்டத்தில் காட்சி தருவது, இங்கு வாழும் கிறிஸ்தவர்களாலும், இந்து மக்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றமை சிறப்பம்சமாகும். நோயோடு போராடும் பக்தர்களுக்கு புனித நீராடுவதற்கு செபஸ்தியார் ஆலயங்களில் பராம்பரிய பக்தி முயற்சியாக காணப்படும் நீராடலுக்கான கிணறும் இங்கே காணப்பாடுவது சிறப்பம்சமாகும்.

**இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!!**
**புனித செபஸ்டியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**

செல்வன் : தேவ பாலன் அரப்பலக் கந்த தோட்டம்.

# புனித வின்சென்ட் தே பவுல்

(கி.பி 1581 - 1660)

புனித வின்சென்ட் தே பவுல் பிரான்சில் காஸ்கனி என்ற நகரில் பிறந்தார். குருத்துவப் படிப்பிற்குப் பின், பாரிஸில் பங்குத் தந்தையாகப் பணியாற்றினார். சில ஆண்டுகளுக்குப் பின் தந்தை பெருய்ல் என்பவரின் தோழமையினால், இவரது ஆன்மீகம் ஆழமடைந்தது. 40 வயதளவில் முற்றிலும் இறைவனுடன் ஒன்றியவராக வாழ்ந்தார். எங்கெல்லாம் இவரது தியாகத் தொண்டு தேவைப்பட்டதோ அங்கெல்லாம் முழுமையாகத் தம்மை அர்ப்பணித்தார்.

நாளடைவில் டிகோண்டி பெருமகளும் அவரின் கணவரும் எளியோருக்குப் பணிபுரிய முன் வருவோருக்கு நிலம், மானியம் முதலானவைகளை வழங்குவதாக வாக்களித்தனர். முதலில் வின்சென்ட் இதற்குத் தலைமையேற்க முற்றிலும் தயங்கினார். ஆனால் நாளடைவில் இப்பணியை ஏற்றுக்கொண்டு வின்சென்சியன் என்ற துறவற சபைக் குருக்களை உருவாக்கினார்.

புனிதர் ஏற்கெனவே ஆப்பிரிக்காவுக்கு முகமதியன் ஒருவனால் நாடு கடத்தப்பட்ட நாட்களில், அங்கே அடிமைச் சந்தையில் இவர் ஆற்றிய பணிகளின் அனுபவம் இவருக்குக் கைகொடுத்து உதவியது. இவருடைய சபைத் துறவிகள் ஏழைகள் மற்றும் ஆதரவற்றோரை பேணுவதற்காகவே தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று சபை ஒழுங்குகளை அமைத்தார்.

இந்த வியத்தகு பணிகளைப் பார்த்த லூயி தமரியாக் என்பரின் தாராளமான பொருளுதவியுடன், பெண்களுக்கும் ஒரு துறவற சபையைத் தோற்றுவித்தார். **பிறரன்பு சகோதரிகள்** என்று இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

இவற்றோடு நின்று விடாமல், 3ஆம் சபை ஒன்றையும் அவர் காலத்தில் தொடங்கினார். இந்தச் சபையினர் ஆழ்ந்த தியாக உணர்வுடனும் ஏழை எளியோரின் கண்ணீரை இயேசுவின் பெயரால் துடைக்க வேண்டுமென்ற சீரிய நோக்கத்துடனும், அன்றுபோல் இன்றும் திருச்சபையின் எல்லாப் பகுதிகளிலும் அன்பையும் இரக்கத்தையும் பரப்புகின்றனர்.

இதில் வியப்பு என்னவென்றால், வின்சென்ட் இயல்பாகச் சினமே உருவானவராகக் காணப்பட்டவர்.

**கடவுளின் அருள் எனக்கு இருந்திராவிடில், நான் இறுதிவரை கல் மனதினனாக, எல்லோருக்கும் சுமையாகவே இருந்திருப்பேன்**

என்கிறார். திருச்சபையில் இருக்கும் எல்லாக் கொடை நிறுவனங்களுக்கும் பாதுகாவலராக பாப்பு 13ஆம் சிங்கராயர் வின்சென்டை அறிவித்தார்.

தலத் திருச்சபையில் நாம் காணும் வின்சென்ட்தே பவுல் 3ஆம் சபையினரிடம் தாராளமான பொருளுதவி கொடுத்து அவர்கள் இயேசுவின் பெயரால் இன்னும் பன்மடங்கு தொண்டுசெய்ய உதவுவோம்.

**சிந்தனைக்கு**

புனிதரின் நூலிலிருந்து : விசுவாசக் கண்ணால் ஏழைகளைப் பார்க்கும்போது எளிமைத்தனத்தைத் தெரிந்துகொண்ட இறைமகனின் வடிவத்தை அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்பது தெரியவரும்... எனவே இயேசுவின் மனப்பான்மையை நமதாக்கிக்கொண்டு, அவரைப் பின்பற்றி ஏழைகளைப் பேணுவோம். ஆறுதல் அளிப்போம். உதவிபுரிந்து அவர்களை ஆதரிப்போம். கடவுள் ஏழைகளை அன்புசெய்கிறார். ஏழைகளை அன்பு செய்வோரையும் அன்புசெய்கிறார். அவர்களின் இடுக்கண்களில் பங்கேற்றுத் திருத்தூதர் பவுல் கூறுவதுபோல்

**எல்லோருக்கும் எல்லாமாக; நடப்போம். பிறருடைய துயர் துடைப்பதில் மிகுந்த பங்கேற்போம்**

# புதுமைகள் புரியும் புண்ணியத்தாய் அன்னை தெரேசா



இந்த உலகில் மூன்று வகையான மனிதர்கள் வாழ்கின்றனர்.

1. முதல் வகையினர் தனது குடும்பம், தனது வேலை என்று தனக்காக வாழ்பவர்கள்.
2. இரண்டாம் வகையினர் எதற்காக வாழ்கிறோம் என்றே தெரியாமல் தனக்கும் பிறருக்கும் பாரமாக வாழ்பவர்கள்.
3. மூன்றாம் வகையினர் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் பிறருக்காக செலவழித்து வாழக்கூடியவர்கள்.

புனித அன்னைதெரேசா மூன்றாம் வகையைச் சார்ந்தவர். தன்மொத்த வாழ்வையும் எளியோர் ஏற்றம் பெற செலவழித்தார். எனவேதான் மதம்,மொழி, இன, பாகுபாடுகளைத் தாண்டி எல்லோராலும் **அன்னை** தெரேசா என்று அன்போடு அழைக்-கப்படுகிறார்.

புனித அன்னை தெரேசா உயிரோடு இருந்த போது மட்டுமல்ல இறந்த பின்பும் ஏழைகளின் கண்ணீரை பல்வேறு புதுமைகள் மூலம் துடைத்துக் கொண்டிருக்கிறார். உலகெங்கும் ஆயிரக்கணக்கான புதுமைகளை அன்னை தெரேசா நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். வத்திக்கானால் அங்கீகரிக்கப்பட்ட இரு முக்கிய புதுமைளை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

**வத்திக்கானால் அங்கீகரிக்கப்பட்ட புதுமைகள்**

**1ம் புதுமை**

1998ம் ஆண்டு மோனிகா பெஸ்ரா என்னும் பெண்மணி வயிற்றுப் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தும் உடல் பலவீனம் காரணமாக அதை செய்ய இயலவில்லை. உயிர்பிழைப்பது கடினமானதாக இருந்தது. செப்டெம்பர் 05ம் நாள் மேற்கு வங்காளத்திலிருந்த அன்பின் பணியாளர் சபை அருட்சகோதரிகளுக்குச் சொந்தமான சிற்றால-யத்தில் செபித்துக் கொண்டிருந்த போது **அன்னை தெரேசாவின் படத்திலிருந்து ஓர் ஒளி வந்ததை கண்டார்.** அந்த நிகழ்விற்குப்பின் நடந்த மருத்துவ சோதனையில் கட்டிகள் முற்றிலுமாக மறைந்திருந்ததை மருத்துவர்கள் உறுதி செய்தனர். 2002ம் ஆண்டு வத்திகான் இந்த புதுமையை அங்கீகரித்தது.

**2ம் புதுமை**

2002ம் ஆண்டு பிராசிலியன் மார்சிலியோ டோட் ஆண்ரினோ என்னும் நபர் மரணப்படுக்கையில் சுய நினைவில்லாமல் இருந்தார். அவருடைய மூளையைச் சுற்றி நீர்க் கோர்த்து இருந்தது. அவரது மனைவி பெர்னான்டா தனது திருமணத்தின் போது ஒரு அருட்பணியாளர் கொடுத்த அன்னையின் புனித பண்டத்தை தனது கணவரின் தலைமீது வைத்து செபித்தார். அவரது உயிரைக் காப்பாற்றும் கடைசி முயற்சியாக மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்து மூளையை சுற்றி உள்ள நீரை அகற்றுவதென்று முடிவு செய்தனர். அறுவை சிகிச்சை செய்யும் சற்றுமுன் கோமாவில் இருந்த அவர் எழுந்து **நான் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறேன்** என்று கேட்டார். பின்பு நடந்த மருத்துவ சோதனையில் அவர் மூளையைச் சுற்றி இருந்த நீர்கோர்வை முற்றிலும் மாறி இருந்ததை மருத்துவர்கள் உறுதி செய்தனர். அதன்பின் அவருக்கு அறுவை சிகிச்சை தேவைப்படவில்லை.

2015ம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் இப்புதுமையை அங்கீகரித்தார். குணம் பெற்ற மார்சிலோ, செப்டெம்பர் 04, 2016 அன்று குடும்பத்தோடு அன்னை தெரேசாவின் புனிதர்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டார்.

**தல்கஸ்வலை அன்னை தெரேசா ஆலயம் மூலம் நடந்த புதுமைகள்**

இலங்கை தேசத்தில் புனித அன்னை தெரேசாவிற்கு ஒப்புக்-கொடுக்கப்பட்ட முதல் ஆலயம் காலி மறைமாவட்டத்தில் உள்ள தல்கஸ்வலை என்னும் தேயிலை தோட்டத்தில் அமைந்துள்ளது. 2012ம் ஆண்டு அர்ச்சிக்கப்பட்ட இவ்வாலயத்திலும் பல புதுமைகள் நடந்து கொண்டி-ருக்கிறது.

**1ம் புதுமை**

எட்டு வருடங்களுக்கு முன்பு இவ்வூர் மக்களுக்கு என்று ஆலயம் ஒன்று இருக்க-வில்லை. அருகில் உள்ள ஆலயங்கள் 24 மற்றும் 32 கி.மீ தொலைவில் இருந்தது ஒரு ஆலயத்திற்கு போய் முழந்தாள் படியிட்டு செபிப்பதே இம்மக்களுக்கு எட்டாக்கனியாக இருந்தது. இன்று மனம் நினைக்கும் போதெல்லாம் சென்று செபிக்க ஆலயம் இருக்கிறது. அத்தோடு கட்டப்பட்ட சில ஆண்டுகளிலேயே பல்வேறு பகுதிகளிலிருந்து மக்கள்தேடி வந்து செபிக்கும் அளவுக்கு இவ்வாலயம் வளர்ந்-துள்ளது. இவ்வாலயம் இங்கு அமைந்ததை அன்னையின் முதல் புதுமையாக இவ்வூர் மக்கள் பார்க்கின்றனர்.

**2ம் புதுமை**

2018ம் ஆண்டு லாலினி என்பவருடைய மகள் குழந்தை பேற்றிற்காக மாத்தறை அரசு மருத்துவ- மனையில் அனுமதிக்-கப்பட்டார். தாயின் உடல் நலக்குறைவு வயிற்றில் உள்ள குழந்தையையும் பாதித்தது. எனவே தாயையும் சேயையும் காப்பாற்றுவது கடினம் என்று கூறி அறுவை சிகிச்சையை தொடங்கினர் மருத்துவர்கள். குடும்பத்தினர் அனைவரும் தல்கஸ்வலை அன்னை தெரேசாவை நோக்கி உருக்கமாக மன்றாடினர். அறுவை சிகிச்சை நேரத்தில் ஆலயத்திலும் சிறப்பு செபம் சொல்லப்பட்டது. மருத்துவர்களே அதிசயிக்கும் விதத்தில் தாயும் சேயும் நலம் பெற்றனர்.

**3ம் புதுமை**

2017ம் ஆண்டு திருமதி லீலா என்பவர் திருப்பயணமாக தல்கஸ்வலை தெரேசா ஆலயத்திற்கு வந்தார். அவருடைய உறவினரான திரு ரங்கன் மற்றும் அவரது மனைவி மண முறிவு பெற, கடைசி கட்ட தயாரிப்பில் இருந்தனர். இந்த இளம் தம்பதியினர் பிரிந்து விடக்கூடாது எப்படியாவது மீண்டும் இணைந்து வாழ வேண்டும் என்று அன்னை தெரேசாவிடம் உருக்கமாக மன்றாடினார். அத்தோடு தான் அடுத்த முறை வரும் போது மீண்டும் இணைந்த அந்த தம்பதியினரோடு வர வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார். 2019 மார்ச் மாதம் மீண்டும் இணைந்து அந்த தம்பதியினரோடு வந்து தல்கஸ்வலை அன்னை தெரேசாவிற்கு நன்றி செலுத்திச் சென்றார் திருமதி லீலா.

**தல்கஸ்வலை அன்னை தெரேசாவின் ந்துரையால்**

- செய்யாத தவறிற்காக சிறை சென்ற என் கணவர் விடுதலைப் பெற்றார்.
- எனது புற்றுநோய் கட்டிகள் அறுவை சிகிச்சை இன்றி அகன்றது.
- பிரிந்த எனது குடும்பம் இப்போது சேர்ந்து வாழ்கிறது.
- மகன் பாவ வாழ்வில் இருந்து விடுதலை பெற்றுள்ளான்.
- மகளின் திருமணத் தடைகள் நீங்கியது.
- எனக்கு நிரந்தர வேலை கிடைத்தது.
- அப்பா குடி பழக்கத்-திலிருந்து விடுதலை பெற்றிருக்கிறார்.
- வருடக்கணக்கில் இருந்த மூட்டு வலியிலிருந்து விடுதலை பெற்றுள்ளேன்
- உயர் கல்விக்கு இடம் கிடைத்துள்ளது,

என்று நூற்றுக்கணக்கானோர் நடந்த புதுமைகளுக்கு சாட்சிகளாக இருக்கின்றனர்.

தல்கஸ்வலை புனித அன்னை தெரேசா ஆலயத் திருவிழா இவ்வருடம் செப்டெம்பர் 08 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செப்டெம்பர் 15 அன்று காலி மறைமாவட்ட ஆயர், மேதகு ரெய்மென்ட் விக்ரமசிங் அவர்கள் தலைமையில் திருப்பலியோடு நிறைவு பெறும்.

## 01 யார் எம்மை...

எமது இந்த கேள்விகளுக்கு சரியான பதில் கிடைக்குமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. சில நேரம், இவர்களிடம் நியாயம் கேட்பது அர்த்தமற்ற ஒன்றாகவே படுகிறது. ஆயினும் எமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை. அதற்காக எந்தவொரு சவாலு-க்கும் முகம் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதி.மேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தேவத்தை, இலங்கை மாதா தேசிய பசிலிக்கா திருத்தலத்தில் நடைப்பெற்ற வருடாந்த நோயாளிகள் தின திருப்பலியின் போது இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கூறுகையில், அரசியல் வாதிகளுக்கு மாத்திரமல்ல, அனைத்து மக்களுக்கும் கூறுகிறேன்; நியாயம் கிடைக்கும்வரை நாம் காலை - மாலை என தொடர்ந்து செபிக்க வேண்டும். யார் எம்மை ஏமாற்றினாலும் இறைவன் எம்மை ஏமாற்ற மாட்டார் என்பதை நாம் அறிவோம்.

இவ்வழிப்பாட்டில் இத்தாலி ஆயர் மன்றத்-தலைவர் அதி. மேதகு. குல்டி வோரோ கர்தினால் பசெட்டி ஆண்டகை அவர்களின் தலைமையில் உதவி ஆயர்கள், ஓய்வு பெற்ற ஆயர் அதி.வண. ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகை, இத்தாலியின் இலங்கைக்கான சேவை இணைப்பதிகாரி. அருட் பணி நெவில் ஜோ பெரேரா, இத்தாலியைச் சேர்ந்த அருட் பணி தொன் லியார்தாடோ டீமோரோ, இலங்கை அப்போஸ்தலிக்க முதல்வர், செயலாளர், மறைவமாட்ட குருக்கள் என பலரும் இதில் கலந்துக்கொண்டனர். அன்றைய நாளில் இடைக்கிடை பெய்த மழையையும்பொருட்படுத்தாது விசுவாசப் பெருமக்களும் கலந்து இறைவனின் குணப்படுத்தலையும் ஆசீரையும் நிறைவாகப் பெற்றுச் சென்றனர்.

## 01 தாய் நாட்டை...

புரட்டாதி 8ம் திகதி ஞாயிறு தேவ அன்னையின் பிறந்த நாள் தினத்தில் செபத்தின் நாளாக தாய் நாட்டை தேவ அன்னைக்கு ஒப்புக் கொடுக்கும் ஞாயிறாக அனைத்து மறை மாவட்டங்களில் உள்ள பங்குகளிலும் உள்ள பங்குத் தந்தையரிடம் இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் கேட்டுக்கொள்கிறது. இலங்கை மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கும்செபத்தை இதற்காக சொல்ல கேட்டுக்கொள்கிறோம்.

## 01 அன்னைக்கு முடி...

சமர்ப்பிக்கப்பட்டது. தேவத்தை, நோயாளர் தின வழிப்பாட்டுக்கு முதல் தேவத்தை,தேசிய பசிலிக்கா திருத்தல பரிபாலகர் அருட்பணி விக்டர் ஜயமான்ன அவர்களுடன் உயரத்தூக்கியின் உதவியுடன் எமது கர்தினால் ஆண்டகை ஆலய பீடத்திற்கு மேல் வீற்றிருக்கும் இலங்கை மாதாவுக்கு கிறீடம் சூட்டிய பின்பு பேராயர் அதி.மேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை செய்த செபத்தில் வேண்டினார்கள். அதன்பின்பு நோயளர் வழிப்பாடு இத்தாலிய ஆயர் மன்றத்தலைவர் குல்டியோரோ கர்தினால் பசெட்டி ஆண்டகையின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

## 04 இலங்கை மண்ணிலே...

தமிழ், சிங்களத்தின் முக்கியத்துவம் வரத் தொடங்கியதன் காரணமாக சபையின் செயற்பாட்டிலும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருகை தரும் அருட்சகோதரர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததோடு இங்கு பணியாற்றும் ஐரோப்பிய சகோதரர்களும் நாட்டைவிட்டு வெளியேறத் தொடங்கினர். இதனால் நிர்வாகமும் பொறுப்பும், தொடரும் அபிவிருத்தியும் சுதேச சகோதரர்களின் கைகளிலே எதிர்பாராத விதமாக இறை பராமரிப்போடு கிடைத்தது.

1919ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள அருட்சகோதரர்கள் ஒன்றினைத்து தமக்கே உரித்தான விதத்தில் நிர்வாக அமைபைத் தாமே பொறுப்பெடுத்து **கொழும்பு மாவட்டம்** என்று செயற்படத் தொடங்கினர். இன்று 57 அருட்சகோதரர்கள் இலங்கையிலும் பிலிப்பைன்ஸ்சிலும் பணியாற்றி தமது உருவாக்கல் பணியையும் மேற்கொண்டு வருகின்றனர்.

1959ஆம் ஆண்டளவில் பூரணமான ஓர் அமைப்பாக டியகல இளைஞர் நகரம், தனது பணியை இளைஞர்களுக்கெனச் செயற்படுத்தத் தொடங்கியது. இதே காலப்பகுதியில் தான் சகோதரர்கள் இங்கிருந்து இந்தியா, பாகிஸ்தான் போன்ற இடங்களுக்குத் தனது பணியை விஸ்தரித்தனர். பாகிஸ்தானின் பணித்தளம் மட்டுமே இவர்களுக்கு புதியது. காரணம் இந்தியாவில் அவர்கள் ஏற்கனவே சபையை ஆரம்பித்துச் சில பிரச்சினைகள் காரணமாக இடை நிறுத்தியிருந்தனர். ஆனால் இன்று பாகிஸ்தானில் இருந்தும் தமது பணியை இடைநிறுத்திக் கொண்டனர். தூய டிலாசாலின் சிந்தனை இலங்கையில் பலமாக வேரூன்றப்பட்டதால் 1972ஆம் ஆண்டு அவர்கள் டிலாசால் கல்வி நிறுவனத்தை, கொட்டாஞ்சேனையில் ஆரம்பித்தனர்.

இங்கு பாடசாலையைக் கைவிட்டவர்களுக்கு ஆங்கிலம், தொழிற் பயிற்சிகள் என்பன கற்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து L.C.E.S லசாலியன் சமூகக் கல்விச் சேவை முகத்துவாரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் மேலும் இரு பாடசாலைகள் சேரிப்பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுச் சேரிகளில் வாழ்பவர்களுக்குக் கல்வி புகட்டப்பட்டது. இது ஒரு மெச்சத் தகுந்த பணியாக எல்லோராலும் கணிக்கப்பட்டு வருகின்றது.

1991 ஆம் ஆண்டின் இறுதியில் டிலாசால் சகோதரர்கள் தமது பல்கலைக்கழகக் கல்வியைத் தொடரும் முகமாக யாழ். மண்ணிலே காலடி எடுத்து வைத்துப் பணியாற்றத் தொடங்கினர். ஆனால் அவர்களது பணி 1996ம் ஆண்டின் இடப்பெயர்வோடு முற்றுப்பெற்று விட்டது. இவ்வேளையில் அவர்கள் முகத்துவாரத்தில் (LEA) லசாலியன் ஆங்கிலக் கல்வி நிறுவனத்தை நிறுவி அதன் மூலம் மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கும் ஆங்கில பயிற்சியை வழங்கி வருகின்றனர். அதனை தொடர்ந்து மன்னாரிலும் பல புதிய பாடசாலைகளைப் பொறுப்பெடுத்து நிர்வகித்து வருவதோடு மன்னாரில் லசாலியன் ஆங்கில பாடசாலையையும், கொழும்பில் கொட்டாஞ்சேனையிலும், வத்தளையிலும் ஆங்கில மொழி பாடசாலைகளை ஆரம்பித்து நிர்வகித்து வருகின்றனர். இவ்வாறு கடந்த 150 ஆண்டுகளாக இலங்கை மண்ணிலே தமது சபை ஸ்தாபகரின் எண்ணங்களையும், ஆசைகளையும் நிறைவேற்றிய பெருமிதத்தோடு இவர்கள் பணி சிறக்க இவர்களோடு இணைந்து செயற்பட்ட, ஊக்கமளித்த, சந்தர்ப்பங்களை வழங்கிய ஆயர்கள், குருக்கள், துறவிகள், லசாலிய பங்காளிகள், லசாலிய குழுமத்தைச் சார்ந்தவர்கள், பழைய மாணவர்கள், தற்போதைய மாணவர்கள் ஒவ்வொருவரையும் நன்றியோடு நினைவு கூருகின்றனர். இனிவரும் காலங்களிலும் இவர்கள் பணி இம்மண்ணிலே சிறக்க இச்சபைக்கு அழைத்தல்கள் பெருக பலர் மனமுவந்து தம்மை இப்பணிக்கு அர்ப்பணித்திட இறையருள் வேண்டி வாழ்த்துவோம்.

## 03 இறப்பால்...


தொடக்கம்” எனக் கருதப்பட்டது. எனவே, சபை மன்றாட்டில் இவ்வாறு செபிக்கின்றோம். “புனித அன்னை மரியாவின் தாய்மைப்பேறு எங்கள் மீட்பின் தொடக்கமாக இருந்ததுபோல், நாங்கள் இன்று கொண்டாடும் அந்த அன்னையின் பிறப்பு விழா உலகிற்கு அருளையும், அமைதியையும் அளிப்பதாக”. இறைவனின் தாயின் மாசற்ற பிறப்பு நமது மீட்பின் விடியற்காலமாக அமைகிறது என்ற நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது எனலாம். மரியாவின் மண்ணகத் தோற்றத்திலிருந்தது இறைவனின் திட்டத்தில் அவர் சிறப்பிடம் வகிக்கிறார். அவர் ஒரு மகனைப் பெற்றெடுக்கும் தூய அன்னையாவார். “அவரிடமிருந்து நீதியின் கதிரவனாகிய நம் இறைவன் கிறிஸ்து உதயமானார்” எனவேதான், மரியாவின் பிறப்பு விழாவை மகிழ்வுடன் கொண்டாடுகின்றோம்.

கிழக்கத்திய திருச்சபையிலும் இதேபோன்று வழிபாட்டில் அன்னையைப் புகழும் பாடல்களைக் காண்கின்றோம். பைசாண்டியன் வழிபாட்டில் “உலக-ளாவிய மகிழ்ச்சிக்கு இந்நாள் ஒரு முன்னோடி, இந்நா-ளில் மீட்பை அறிவிக்கும் காற்று வீசுகிறது” என்று வாசிக்கிறோம்.

2. இன்று முக்கியத்துவம் பெறும் மற்றொரு உண்மை. மரியாவின் குடும்பப் பின்புலம். இயேசு கிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல் அவருடைய மனிதத் தன்னையை விளக்குவதுபோல், மரியாவும் மனித இனத்தைச் சார்ந்தவர், ஆபிரகாம் வழிமரபில் தோன்றியவர், யூதா கோத்திரத்தில் தாவீதின் அரச வம்சத்திலிருந்து வந்தவர். மரியா மனித வழிமரபையும் இது நமக்கு உணர்த்துகிறது. இயேசு கிறிஸ்து வழியாக வந்த மீட்பு மாந்தர் அனைவரையும் சாரும் என்பதால் அவருடைய மூதாதையர் பட்டியலில், இரு பிறஇனப் பெண்களும் (ராகாப், ரூத்), பாவிகளாகிய இரு பெண்களும் (தாமார், உரியாவின் மனைவி) இடம்பெறுகின்றார்கள். கிறிஸ்துவினால் வரவிருந்த மீட்பின் விடியலாக மரியா இப்பெண்மணிகளுள் ஒருவராகக் காட்டப்படுகிறார்.

அன்னை மரியா மீட்புத் திட்டத்தில் முக்கிய இடம்பெறுகிறார். மீட்பரை உலகிற்குக் கொண்டுவந்த ஒரு நற்கருணைப் பேழைதான் மரியா. “தூய மரியே. உமது பிறப்பு உலகிற்கு மீட்பரைக் கொடுத்தது. எங்கள் பிறப்பு எதைக் கொடுக்கப்போகிறது? உமது பிறப்பு உலகிற்கு மகிழ்ச்சி, நிலைவாழ்வு, உலக வரலாற்றில் ஒரு திருப்புமுறையைக் கொண்டுவந்தது”.

நம்முடைய பிறப்பு எப்படிப்பட்ட மாற்றத்தைக் கொண்டு வரப்போகிறது? என்பதைச் சிந்திக்க திருச்-சபை நமக்கு அழைப்பு விடுகிறது. எனவே, நான் ஏன் பிறந்தேன்? எதற்காகப் பிறந்தேன்? என்று சொல்லி ஒவ்வொரு நாளும் நாம் பிறருக்காக வாழ அன்னை மரியாவின் பிறப்பு ஒரு நல்ல பாடமாக அமையட்டும்.



## மணமகள் தேவை

**வத்தளையில் 1993ல் பிறந்த, நற்குணமும் நற்பண்பும் நிறைந்த, தனியார் கம்பனியில் நிரந்தர வேலை செய்யும் கத்தோலிக்க மணமகனுக்கு மணமகள் தேவை**

**தொடர்புகளுக்கு : 0787054377**

(26073)

## 05 சுடர் .....

**விருதுகள் – கௌரவங்கள்**

அன்னையின் அன்பு கனிந்த சேவையைப் பாராட்டி இந்தியாவில் மட்டுமல்ல, அகிலமெங்கிலுமிருந்தம் மிக உயரிய விருதுகள் வழங்கப்பட்டன. இந்தியாவில் 1962இல் பத்மஸ்ரீ விருதும், 1972இல் ஜவகர்லால் நேரு விருதும், 1980இல் பாரத ரத்னா விருதும், 1992இல் பாரதத்தின் தவப்புதல்வி விருதும் வழங்கப்பட்டன. உலகிலேயே உயர்ந்த விருதுகளான பிலிப்பைன்ஸ் ஜனாதிபரி ரேமன்மாக்ஸேஸே விருது 1962லும், திருத்தந்தை 23வது ஜோன் சமாதானப் பரிசு மற்றும் ஜான் கென்னடி உலகப் பரிசு 1971லும், அண்ணல் பிரான்சிஸ் அசிசியார் பரிசு 1974லிலும், இங்கிலாந்து அரசின் தலைசிறந்த குடிமகள் விருது 1978லும், பால்சான் அனைத்துலக விருது 1979லிலும் தரப்பட்டன. உச்சக்கட்டமாக நார்வே நாட்டின் உலகிலேயே கிடைத்ததற்கரிய பரிசான நோபல் பரிசு 1979லும் வழங்கப்பட்டது. இவை தவிர பல்கலைக்கழங்கள் பலவற்றிலிருந்து டாக்டர் பட்டங்கள் வேறு.

1997 புரட்டாதி 5ம் நாள் வெள்ளி இரவு 9.30 மணிக்கு தனது சபை தலைமையத்தில் அன்னை தெரேசா உயிர் துறந்தார். ஆசிரியராகத் தனது பணி வாழ்வைத் தொடங்கிய அன்னை, ஆசிரியர் தினத்தன்றே மரணம் எய்தியது சிறப்புக்குரிய ஒன்றல்லவா! அன்னை பிறப்பால் இந்தியர் அல்லர், இருப்பினும் இந்தியாவெங்கும் தேசியக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. அன்னையின் இறப்பு மரபுகளை எல்லாம் மீறி, கறுப்புக் கோடிட்டச் செய்தியாக அரசாங்க ஜெகட்டில் பதியப்பட்டது. அன்னையின் பூதவுடல் தேசியக் கொடியால் போர்த்தப்பட்டு 48 மணி நேரம் முப்படையினரால் பாதுகாக்கப்பட்டு காந்தி, நேரு இருவரை மட்டுமே தாங்கிச் சென்ற இராணுவ வண்டி அன்னையின் உடலை ஏந்திச் சென்றது. 2003, ஐப்பசி 19 ஞாயிறு காலை 10.00 மணிக்கு உரோமையில் உள்ள தூய பேதுரு தேவாலய சதுக்கத்தில் மாபெரும் மக்கள் கூட்டத்தின் மத்தியில் திருத்தந்தை இரண்டாம் ஜோன்போல் அன்னைக்கு அருளாளர் பட்டத்தை வழங்கினார்.

**ஒளிவிளக்கு!**

அன்னை தெரேசாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய “பஞ்ச” என்னும் ஆங்கில பத்திரிகையில் பணியாற்றிய மால்கம் மகிரிட்ஜ் என்பவரிடம் அன்னை பற்றி கேள்வி ஒன்று கேட்கப்பட்டது. “அன்னை தெரேசா பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? அவர் ஒரு புனிதையா?” அதற்கு அவர் அளித்த பதில் “அவர் ஒரு புனிதையா என்பதை வருங்காலத் தலைமுறைகள் நிச்சயிக்க வேண்டும். ஆனால், ஒன்று மட்டும் உறுதி. இருள் அடர்ந்த இக்காலத்தில் அவர் சுடர் விட்டெரியும் ஓர் ஒளிவிளக்கு” என்றார். மால்கம் கருத்தை யாரும் மறுப்பதற்கில்லை.

## 10 விவிலிய வினா விடை

85. பன்னிரண்டு (5:41)
86. உணவு (5:43)
87. ஓய்வு நாளில் கற்பிக்க தொடங்கினார் (6:2)
88. யாக்கோபு, யோசேப்பு, யூதா, சீமோன் (63)
89. சொந்த ஊரிலும், சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் மதிப்பு பெறுவர் (6:4)
90. சிலர் மேல் கைகளை வைத்து குணமாக்கினார் (6:5)
91. இரண்டு இரண்டு பேராக அனுப்பினார் (6:7)
92. தீய ஆவியகள் மீது அதிகாரம் அளித்தார் (6:7)
93. கைத்தடி, அணிந்திருக்கும் அங்கி மற்றும் மிதியடி (6:8)
94. உணவு பை, இடைக்கச்சையில் செப்பு காசு வேண்டாம் என்றார்.

# மாத்தறை மாதா தேசிய திருத்தலம் 112வது வருடாந்த திருவிழா – 2019

## புரட்டாதி 06,07 மற்றும் 08

- ஆவணி மாதம் 29ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொடியேற்றம்
- ஆவணி 30ஆம் திகதி தொடக்கம் புரட்டாதி 05ஆந் திகதி வரை தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையும், நவநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.
- புரட்டாதி 06ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 4.30 மணிக்கு நற்கருணை ஆராதனை மற்றும் நற்கருணை பவனி காலி மறைமாவட்ட குரு முதல்வர் அதி வண. சாள்ஸ் ஹேவாவசம் அடிகளாரின் தலைமையில் நடத்தப்படும்.
- புரட்டாதி மாதம் 07ஆம் திகதி – சனிக்கிழமை காலை 8.30 திருப்பலி, காலை 10.00 திருப்பலி, காலை 11.30 திருப்பலி
- புரட்டாதி 07ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு ஆண்டகை மற்றும் பிரமுகர்களை வரவேற்றல்.



**மாலை ஆராதனை: புரட்டாதி 07ஆம் திகதி சனிக்கிழமை 4.15 மணிக்கு**
திருச்செபமாலை தியானம், மற்றும் மன்றாட்டு, மாலை ஆராதனை மற்றும் மாத்தறை அன்னையின் திருச்சுரூப பவனி
இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு. கிளீட்டஸ் சந்திரசிறி பெரேரா (OSB) ஆண்டகையின் தலைமையில் நடைபெறும்.

**திருவிழா திருப்பலி : புரட்டாதி 08 ஞாயிறு காலை 8.00 மணி**
காலி மறைமாவட்ட ஆயர் மேதகு. றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை மற்றும், இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு. கிளீட்டஸ் சந்திரசிறி பெரேரா (OSB) ஆண்டகை ஆகியோரின் தலைமையில்

புரட்டாசி 08ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
காலை 4.00 திருப்பலி – சிங்களம்
காலை 5.00 திருப்பலி – தமிழ் மற்றும் சிங்களம்
காலை 6.00 திருப்பலி – ஆங்கிலம் மற்றும் சிங்களம்
நண்பகல் 12.00 திருப்பலி – சிங்களம்
மாலை 5.00 திருப்பலி – சிங்களம்

(2631)

* புரட்டாசி 07ஆம் திகதி சனிக்கிழமை சிலாபத்திலிருந்து (பங்கதெனிய) மாத்தறை வரை விசேட புகையிரத சேவை ஒன்று நடைபெறும்.
* புரட்டாசி 08ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாத்தறையிலிருந்து சிலாபம் (பங்கதெனிய) வரை விசேட புகையிரத சேவை ஒன்று பிற்பகல் 1.20 மணிக்கு நடைபெறும்.
* புரட்டாசி மாதம் 06ஆம் திகதி வியாழக்கிழமை முதல் பக்தர்களுக்காக பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

திருத்தலப் பரிபாலகர் அருட்தந்தை. மைக்கல் கொலின் நிக்சன் அடிகளார் மற்றும் உதவிப் பங்குதந்தை அருட்தந்தை சுசித்த அசிறி, அடிகள்
official web : www.ourladyofmathara.org
E-mail: frcolinm@gmail.com
தொ.பேசி 041-2222056

**உங்கள் அனைவரையும் வரவேற்கின்றோம்**




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

தொடர்புகொள்ளுங்கள்
இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com / www.colomboarchdiocesancatholicpress.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்